T-UN-341

உ

சிவமயம்

# விருத்தாசல
# புராணம்

விருத்தாசலம்
விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தான
வெளியீடு

1982] [விலை ரூ. 1-00

190

உ

சிவமயம்

13-6-90
விருத்தாசலம்

# திருமுதுகுன்றத்
# தல வரலாறு

—✻—

தவமேதுஞ் செய்யவேண்டாம் தருமங்கள்
செய்யவேண்டாம்
புவனேசன் விருத்தகிரிப் புராணத்தைப் புலப்பாட்டாற்
கவலாதே கற்றோருங் கேட்டோருங் கதியடைவர்
சிவனாணை சிவனாணை சத்தியமே

விருத்தாசலம்
**விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தான**
வெளியீடு

அச்சிட்டோர்:
——சிவகாமி பவர் பிரிண்டர்ஸ், விருத்தாசலம்.——
[போன் : 121]

1982] [விலை ரூ. 1—00

# ஐந்தாம் பதிப்பு

## முகமன்

இச்சிறு நூலின் முதற்பதிப்பு 1942-ஆம் ஆண்டு ஆலய வெளியீடாக வெளியிடப்பட்டது. அதுகாலை நூலை எழுதிக் கொடுத்துதவியர். விருத்தாசலம் உயர்நிலைப் பள்ளி முன்னாள் தலைமைத் தமிழ் ஆசிரியர் வித்வான் திரு. ஆர். சுந்தரராச உடையார் அவர்கள் ஆவர். அன்னாருக்கு எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

2-ஆம் பதிப்பு 1955-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
3-ஆம் பதிப்பு 1963-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.
4-ஆம் பதிப்பு 1975-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இங்ஙனம்,

**R. விருத்தகிரி,**
*தலைவர், அறங்காவலர் குழு.*

*அறங்காவலர்கள்:*

**R. விருத்தகிரி,**
**வேலா. மாரிமுத்து,**
**M. கலியன்,**
**A. செல்வராஜ்.**

**M. இராமசாமி**
*நிர்வாக அதிகாரி.*

ஓம்.

சிவமயம்.

# திருமுதுகுன்றத் தல வரலாறு

திருமுதுகுன்றம்: இது மிகப் பழமையான பதி. நடுநாட்டிலுள்ளபாடல்பெற்றசிவத்தலங்கள் 22னுள் ஒன்றாகும். சைவ சமய ஆசிரியர் மூவராலும் பாடல் பெற்ற சிறப்புடையது. மற்றும் அருணகிரியார், குருநமசிவாயர், குமாரதேவர், சிவப்பிரகாசமுனிவர், இராமலிங்க அடிகள், சொக்கலிங்க அடிகள் முதலானோராலும் திருப்பாடல்கள் பெற்றுத் திகழ்வது.



திருமுதுகுன்றம் பழமலைநாதர் கோவில்

தமிழ் நாட்டில் குன்றம் என்ற பெயர் கொண்ட பதிகள் சில உள்ளன. அவை திருக்கழுக்குன்றம்,

திருப்பரங்குன்றம், திருக்கொடுங்குன்றம் என்பன வாம். அவைபோல இப்பதியும் திருமுதுகுன்றம் என வழங்குகின்றது. ஆனால் அப்பதிகளில் குன்றம்என்ற பெயருக்கேற்ப குன்றுகள் உள்ளன. இப்பதியில் முது குன்றம்என்றபெயர்மட்டுமேஉளது.குன்றம் இல்லை; குன்று பூமியில்அழுந்திநிற்பதாகத் தலவரலாறு கூறு கின்றது.அதற்கேற்ப பூமிக்கடியில் கற்பாறையாகவே இருக்கின்றது. எல்லா மலைகளும் தோன்றுதற்கு முன்னரேதோன்றி மறைந்தமையால் இதற்குப் பழ மலை அல்லது முதுகுன்றம் என்று பெயர் வந்தது என்பர். வடமொழியில் **விருத்தாசலம்** என்று பெயர். (விருத்தம் = பழமை, அசலம் = மலை)

இட அமைப்பு: இங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அத்தன் பெயர் பழமலைநாதர். அம்மையின் பெயர் பெரியநாயகி. புண்ணிய நீர்: திருமணிமுத்தாறு, நித்தியானந்தகூபம், அக்கினி தீர்த்தம், சக்கர தீர்த்தம், குபேர தீர்த்தம் முதலிய ஐந்துமாம். தலமரம் வன்னிமரம். இந்த ஊர் இப்பொழுது தென்னாற்காடுமாவட்டத்தில் உள்ளது. விழுப்புரம்-திருச்சி இருப்புப்பாதையும்,சேலம்-கடலூர் இருப்புப்பாதையும் கூடும் இடமான விருத்தாசலம். புகைவண்டி நிலையத்திலிந்து நேர்தென்பால் 1½கல் தொலைவில் உள்ளது. விழுப்புரம்-திருச்சி இருப்புப் பாதையிலுள்ள புகைவண்டி நிலையத்திலிருந்து (டவுன் ஸ்டேஷனிலிருந்து) நேர்கீழ்பால் ½ கல் தொலைவில் உள்ளது. இரண்டிடத்தும் குதிரை வண்டிகள் கிடைக்கும்.

வசதி: கோயிலை அடுத்துள்ள வீதிக்குக் கோட்டை வீதி என்றுபெயர். அதன் தென்கோட்டை வீதியில் ஹைட்துரை சத்திரம் உண்டு. அதில் வாடகைக்கு இடம்கிடைக்கும். ஷெ வீதியின் தென்மேற்கு மூலையில் ரெட்டியார்சத்திரம் உண்டு. அங்கு தங்க, சமைக்க வசதி உண்டு. மேலைக்கோட்டை வீதியில் பசு மடம்உளது. அதில்தங்கமட்டும்வசதி உண்டு. வடக்குக் கோட்டை வீதியில் தீவளூர்பிள்ளை சத்திரம்உண்டு. அங்குப் பகல் இரவு இருவேளையும் யாத்திரை வாசிகளுக்கு இலவசஉணவு கிடைக்கும். ஷெ வீதியின் நடுவில் பெ.ப.வி.வினைதீர்த்தான்செட்டியார்சத்திரம் உளது. அங்குத் தங்க, சமைக்க நல்ல வசதி உண்டு. வாடகைஇல்லை. அதன் கீழ்பால், கர்னத்தம்சுப்பராய செட்டியார் சத்திரம் இருந்தது.

வடக்கு கோபுர வாயிலுக்கு நேர் வடபுறம் திரு மணிமுத்தாற்றில் நீராடுதல் வேண்டும். அதுவே புண்ணியமடுவெனப் புகழ்பெற்ற இடமாம். எலும்பு கல்லாக மாறிய இடம் அதுவேயாம்.

ஊர்: திருமணிமுத்தாறு ஊருக்கு வடபுரமும் கீழ்ப்புறமுமாக வந்து தென்கிழக்காக ஓடுகிறது. ஆற்றுக்குக் கீழ்பால் தெப்பக்குளம் உளது. அதை அடுத்துச்சிலவீதிகளும் உள்ளன. ஆற்றுக்கு வடபால் காட்சிக்கினிய சோலைகளும், நீரூற்று ஓடைகளும் இயைந்துஉள்ளன. கோயிலைச் சுற்றித் தேரோடும் வீதிஅகன்று அமைந்துள்ளது. கோயிலுக்குவடபாலும் கீழ்பாலும்ஆற்றுக்குப்படித்துறைகள் அமைந்துள்ளன ஊர், கோயிலுக்குத் தெற்கும் தென்கிழக்குமாகவே

பரந்து விரிந்து நிற்கின்றது சுமார் எண்பதாயிரம் மக்கள் எண்ணிக்கை உடையது.

கோயில்: கோயில் மிகப் பெரியது. புறச் சுற்று மதில் கீழ்மேல் 660 அடியும், தென்வடல் 392 அடியும் உள்ளது. அம்மதில் 4 அடி கனமும், 26 அடி உயரமும் வாய்ந்தது. அதன் நான்கு பக்கங்களிலும் நான்கு உயரிய எழுநிலைக்கோபுரங்கள் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன. அவற்றுள் புராண வரலாறுகளைக்குறிக்கும் பல்வேறு வகையான ஓவிய உருவங்கள் அமைந்துள்ளன. அவற்றின் அமைப்பும் அழகும் காண்பவர் மனதைக் கொள்ளை கொண்டு விளங்குகின்றன.

கீழைக் கோபுர வாயிலுக்கு முன்னால் வெளியே உயரியபதினாறுகால்கருங்கல்மண்டபம்ஒன்றுஉளது. அக் கோபுரவாயிலின் தென்பாற் சுவரில் 36-ம் வட பாற்சுவரில் 36 மாக 72 வகை பரதநாட்டிய உருவங்கள் நடிக்கின்ற பாவனையில் அமைந்திருக்கின்றன. அவ்வாயிலின்உட்பக்கம் முன்னாலிருப்பது கைலாசப் பிரகாரம். அதில் முன்னால் உயர்ந்த கருங்கல் மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு கோபுர தீபாராதனை மண்டபம் என்று பெயர். அதனை அடுத்து மேல்புறம் பரந்தகன்ற பெரியமண்டபம் ஒன்றுஉள்ளது. அதற்கு பெரிய நந்தி மண்டபம் என்றுபெயர். ஆடிப்பூரத்தில் திருக்கல்யாணவிழா இம் மண்டபத்தே நடைபெறும். இதன் நடுவில் பெரிய நந்தியும் கொடிமரமும்உள்ளன. இம்மண்டபத்தின் தென்புறம் 16கால்மண்டபம்ஒன்று உளது. அதற்கு விபச்சித்து முனிவர் மண்டபம்என்று பெயர். மாசிமகம் ஆறாம் விழாவில் பெரிய நாயகர்

காட்சி அளிக்க, விபச்சித்துமுனிவர் இருந்து தரிசிக்கும் விழா நடைபெறும் இடம் இதுவே.

விபச்சித்து மண்டபத்தின் நேர்கீழ்பால் அக்கினி தீர்த்தம் நடைக்கிணராக உளது. அது நான்முகனால் படைக்கப்பட்டது. பாவங்களுக்கு அக்கினியாக உள்ளதுஎன்பர். அதன் நேர்தெற்கில் சொற்பொழிவு மண்டபம் உளது.

அதன்மேல்புறம் ஆழத்துப் பிள்ளையார் கோயில் கிழக்குமுகமாகஉளது. அது 18அடி ஆழத்தில் இருக்கின்றது. இறங்கி ஏறுதற்குப் படிக்கட்டுகள் உள்ளன. தனியே சுற்றுமதிலும் கோபுரமும் உள்ளன. மலரவன், பழமலையின் உண்மையை அறியாது ஒருபொழுது மயங்கிநின்றான். அவனது மயக்க அறிவைப்போக்கி உண்மை அறிவை ஊட்டியவர் இப்பெருமானான பிள்ளையார்என்பர். ஆழத்தில்இருப்பதால் ஆழத்துப் பிள்ளையார் எனவும், ஆழ்ந்தகன்ற நுண்ணிய பொருளாய் உள்ளார் ஆதலின்ஆழத்துப்பிள்ளையார் எனவும் இருவகையில் பெயர்க்கு ஏதுகூறுவர். இப் பெயருடைய பிள்ளையார் இப்பதியிலல்லாது வேறு எப்பதியிலும் இருப்பதாகத்தெரியவில்லை. கைலாசப் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் சக்கர தீர்த்தம் உளது. அதுதிருமாலின் சக்கரத்தால் உண்டாகியது என்பர். இதைச்சுற்றிலும் நந்தவனம் வைத்து பரி பாலிக்கப்பட்டு வருகிறது. இந்தநந்தவனம் நாட்டுக் கோட்டைசெட்டியார் கண்டரமாணிக்கம், ஸ்ரீ மெ.சி. பெரி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தர்மமாகப் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

அக்கைலாசப்பிரகாரத்தின் வடமேற்குமூலையில் 28 ஆகமக்கோயில் உளது. முருகக்கடவுள். இருபத்தெட்டு ஆகமங்களையும் இப்பதியில் சிவலிங்கங்களாகவைத்துப் பூசித்தகாரணத்தால் ஏற்பட்டதுஇது என்பர். அவ்வாகம லிங்கங்களின் பெயர்களை முறையேகாண்க. காமிகேசுவரர், யோகஜேசுரர், சிந்தியேசுரர், காரணேசுரர், அஜிதேசுரர், தீப்தேசுரர், சூக்ஷுமேசுரர், சகஸ்ரேசுரர், அம்சுமானேசுரர், சுப்பிரபேதேசுரர், விஜயேசுரர், நிசுவாசேசுரர், சுவாயம்பேசுரர், அநலேசுரர், வீரேசுரர், ரௌரவேசுரர், மகுடேசுரர், விமேலுசுரர், சந்திரஞானேசுரர், முகபிம்பேசுரர், புரோத்கீதேசுரர், லளிதேசுரர், சித்தேசுரர், சந்தானேசுரர், சர்வோத்தமேசுரர், பரமேசுரர், கிரணேசுரர், வாதுளேசுரர் என்பனவாம். சிவாகமங்களின் அன்புடையார் கண்டு தரிசித்தற்கு இவை இன்றியமையாதவையாம். இக்கோயில் வாயிலின் தென்புறச் சுவரில், கீழ்புறம் தெலுங்குக் கல்வெட்டு ஒன்று உளது.

வடக்குக்கைலாசப்பிரகாரத்தில் அன்னைபெரியநாயகியார் கோயில் கிழக்குமுகமாக அமைந்துள்ளது. அதற்கு ஒரே தனிச் சுற்றுமதில் உள்ளது. வாயிலில் எழுநிலைக்கோபுரம் ஒன்று தனியே உண்டு. அக்கோபுரத்தின் வெளியே பரந்து விரிந்துள்ள கருங்கல் மண்டபம் ஒன்று உளது. அதற்குஅலங்காரமண்டபம் என்றுபெயர். அம்மண்டபத்தின் நடுவிலுள்ள தூண்களில் அரசனும்!அரசியும்போல இரண்டு உருவங்கள் உள்ளன. பெயர் பொறிக்கப்படவில்லை. அவ்விரு உருவங்களுக்கும் தோள்பட்டையோடு கைகள் இல்லை. முகமதியர் ஆட்சி காலத்தே இப்பழுது

நேர்ந்தது என்று கூறுகின்றனர். கோபுர வாயிலுக்கு உள்ளே இடைவெளி மண்டபம்ஒன்று உளது. அம் மண்டபம் சுற்றுமதிலை அடுத்து உள்ளே நாற்புரமும் அமைந்துள்ளது. வடபுற மண்டபத்தில் சண்டேசுவரி கோயில்உளது. அப்பக்கத்தில் தென்புறம் அம்பிகை யின் திருவிளையாடல்களைக்குறிக்குப் மூன்றுஉருவங் கள்உள்ளன. அவை மிக்கவேலைப்பாடுடையனவாய் விளங்குகின்றன. நடுவில், மத்திய கோயில் கருப்பக் கிருகம், அருத்த மண்டபம், மகாமண்டபங்களோடு அமைந்துளது. மகாமண்டபத்தில் ஆடவர்கள் தென் பாலும், மகளிர்கள் வடபாலுமாக நின்று தரிசிப்பதற் காக, இருப்புக்கம்பிகளிட்டுப் பகுக்கப்பட்டுள்ளது. கருப்பக்கிருகத்தில் அன்னை பெரியநாயகியார், ‘பசித் தழும் பிள்ளைக்குப் பால்கனிந்தூட்டும் தாய்போல, கருணை அமுதொழுகக் கனிந்த முகத்துடன் சிறந்து விளங்குகின்றார். இவ்வம்மையை “விருத்தாம்பிகை” என்று கூறுவர். அன்பு கனிய வழிபடுக; அருளமுதம் எய்திடுக; கவலை நீங்கிடுக; இன்பம் நுகர்ந்திடுக.

பெரியநாயகி கோயிலின் வெளிப்புறமுள்ள அலங்காரமண்டபத்தில் கொடிமரமும் நந்தியும் உள் ளன. அதன் அருகில் வடபுறம் குகை முருகக்கடவுள் இருக்கின்றார். அந்த மண்டபத்தினுள்ளே தென்கீழ் பால் கிழக்குமுகமாக உள்ளது நாதசர்மா கோயில். அதன்நேர்கீழ்பால் வெளியில்மேற்குமுகமாகஉள்ளது அநவர்த்தினி கோயில், நாதசர்மா அநவர்த்தினி இருவரும் இப்பதியில் சாரூபப்பதவி எய்தியகாரணத் தால்அவர்களுக்குஇங்கேகோயில்கள் ஏற்பட்டுள்ளன என்பர். அதன் கீழ்பால் குபேரதீர்த்தம் உளது. அது

குபேரனால் படைக்கப்பட்டது என்ப்ர். அதற்கு நேர் கிழக்கே யாகசாலைமண்டபம் உளது. அதன் வடகீழ் மூலையில் வாகனக் கொட்டடி உளது. யாகசாலை மண்டபத்தின் தென்புறம் நூற்றுக்கால் மண்டபம் தெற்குமுகமாக உளது. அதன் முன்புறம் இருபக்கங் களிலும்குதிரைகள் நுகத்தடியில் பூட்டியபாவனையில் அமைந்துள்ளன. அவற்றின் பின்புறம் உருளைகள் அச்சில்பொருந்திய நிலையில்உள்ளன. இம்மண்டபம் ஆதியில்மிகப்பெரியதாக இருந்திருக்கின்றது. முகமதி யர்ஆட்சிகாலத்தே கி.பி.பதினெட்டாம்நூற்றாண்டில் இம்மண்டபத்தின் வடபகுதி மூன்று பங்கு இடிந்து சிதைந்துபோயின.எஞ்சியிருந்த இந்தக்கால்பகுதியும் இடிந்துபோனவடபுறமண்டபத்தின் அடித்தளவரிசை யும்இன்றும்அழியாதுளது காணலாம்.அவ்வடித்தளத் திற்றான் இப்பொழுதுள்ள யாகசாலை மண்டபம் உளது. இப்பொழுதுள்ள நூற்றுக்கால் மண்டபம் கோயில் கணக்குநிலையமாக இருந்துவருகிறது. இம் மண்டபத் தென்புற விளிம்புக்கல்லில் ஒன்றும், தள வரிசையில்ஒன்றுமாக இரண்டு கல்வெட்டுக்கள் உள் ளன. இத்துடன் கைலாசப் பிரகாரம் முடிவடை கின்றது.

அடுத்தது, இரண்டாவது சுற்றுமதில். அது கீழ் மேல் 358அடியும், தென்வடல்190அடியும்உள்ளது. $3\frac{1}{2}$ அடி கனமும், 26 அடிஉயரமும் உடையது. கீழ்புறம் ஒரே வாயிலும், அவ்வாயிலில் உயரிய எழுநிலைக் கோபுரம்ஒன்றும்உடையது. அக்கோபுரம்மிகப்பழமை யானது. அதன் வாயிற்படியிலுள்ள உத்திரக்கற்கள் இரண்டிரண்டாகப் பிளந்தபடியேஉள்ளன. கோபுரத்

துள்ளஉருவங்களும் சிதைந்துள்ளன. அவ்வாயிலின் வலதுபக்கச்சுவரில்11-ம் இடதுபக்கச்சுவரில் 17-மாக 28 கல்வெட்டுகள்உள்ளன. அம்மதிலை அடுத்து உட்புறமுள்ளபிரகாரத்திற்கு வன்னியடிப்பிரகாரம் என்று பெயர். அதில்முன்புறம்தென்வடலாகஉயர்ந்த கருங்கல்மண்டபம்ஒன்றுஉளது. அதற்குக் கொடிமர மண்டபம்என்று பெயர். அதன் நடுவில் நந்தியும் கொடிமரமும்உள்ளன. அவற்றின்பக்கத்துள்ள இருதூண்களில் அரசனும்அரசியும் போல இரண்டு உருவங்கள் எதிர் எதிராக உள்ளன. இரண்டிற்கும் பெ்யர் பொறிக்கப் படவில்லை.அதன் நேர் தென்பால் மடப்பள்ளி இருக்கின்றது. அம்மடப்பள்ளியின் வடபுறச் சுவரினின்று நான்கு கல்வெட்டுக்கள் வெளிவந்துள்ளன. அவ்வடபுறச்சுவரிலும் மேல்புறச் சுவரிலும் எடுக்கமுடியாத நிலையில் மாறுபட்டுக் கிடக்கும் கல்வெட்டுகள் பல உள்ளன.

மடப்பள்ளிக்கு அடுத்த மேல்புறம் தல மரமான வன்னிமரம் உளது. அது மிகப்பழமையானது கற்பக மரமே வன்னிமரமாக வந்து பழமலைநாதர் திருப்பணிக்குஉதவிசெய்ததாகத் தலவரலாறுகூறுகின்றது அம்மரத்திற்குத் தனியே மேடையும் மண்டபமும் உண்டு. அம்மேடையில் பிள்ளையார், விபச்சித்துமுனிவர், உரோமேசமுனிவர், விதர்க்கணசெட்டி, குபேரன் தங்கை முதலாயினோர் உருவங்கள் உள்ளன. அதற்கடுத்த மேல்பக்கம் நித்தியானந்தகூபம் உளது. அது நான்முகனால் படைக்கப்பட்ட புண்ணிய நீர் என்பர். அதன்மேல்புறம் திருமஞ்சனப் பொருள்கள் இருக்கும் கொட்டடி உளது.

தெற்கு வன்னியடிப் பிரகாரத்தில் பஞ்சலிங்கங்கள் உள்ளன. அப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் வல்லபைக்கணபதி உள்ளார். மேற்குவன்னியடிப் பிரகாரத்தில் மதுரை மீனாட்சியம்மை, சொக்கலிங்கம், காசிவிசுவலிங்கம், விசுவலிங்கம், வள்ளியம்மை தெய்வானை உடனுள்ள ஆறுமுகக் கடவுள், விசுவலிங்கம் மற்றும் இருவிசுவலிங்கங்கள், சகஸ்திரலிங்கம், ஏகாம்பரலிங்கம், காஞ்சி காமாட்சியம்மை, ஐம்புலிங்கம், அண்ணாமலையார் முதலியவை உள்ளன. வடக்கு வன்னியடிப் பிரகாரத்தில் பெரியநாயகியார் கோவிலுக்குச் செல்ல இரண்டாவது மதிலில்ஒரு வாயில் உண்டு. அப்பிரகாரத்தின் வடகீழ் மூலையில் நவக்கிரகங்கள் உள்ளன. அதன் தென்கீழ்பால் மலை தண்டாயுதபாணி உளது.

கொடிமர மண்டபத்திற்கு மேற்கும் உள்சுற்று மதிலுக்குக் கிழக்கும் தொடர்ந்து மிகப்பெரிதாக ஒரு கருங்கல்மண்டபம் உளது. அதற்கு இசை மண்டபம் அல்லது அலங்கார மண்டபம் என்று பெயர். அம் மண்டபத்தூண்களில் மிக்க வேலைப்பாடுடன் சிங்க உருவங்கள் அமைந்துள்ளன. அம்மண்டபத்தின் தென் மேற்கு மூலையில் விழாத் தலைவராகிய (உற்சவ மூர்த்தி) பெரியநாயகர் உள்ளார். இவருக்குத்தான் இங்கு எல்லாவகையான திருமஞ்சன ஆராதனைகளும் சீரும்சிறப்பும் மிகுதியாக நடைபெறும். அதனினும் திங்கள்தோறும்பருவத்திருமஞ்சனம் மிகச் சிறப்பாகநடைபெறும். இவர் மாசிமகம் ஆறாம் விழா ஒரு நாள்மட்டுமே வெளிவந்து உலாக்காட்சி தருவார். மற்றைய விழாக்களில் சின்னப்பழமலை நாயகர் வெளிவருவது வழக்கம். இப்பெரியநாயகரை பருவ

காலத்திலும், பிரதோடகாலத்திலும் பிணிகளால் நலிவுறும்மக்கள் எண்ணிறந்தோர்வந்து தரிசித்துப் பிணிகள் நீங்கி இன்புற்று வருகின்றனர். யாவரும் வந்து தரிசித்திடுக; துன்பம்நீங்கி இன்பம்எய்திடுக.

இப்பெரியநாயகர் உற்சவமூர்த்தியாதலின்பிரதிதினமும்அபிஷேகம்நடத்த இயலாதாதலின் உடையவர் என்னும்ஸ்படிகலிங்கத்திற்கு, காலைமாலைஇருவேளையும் அன்னாபிஷேகம் முதலியன நடத்தி அலங்கார சோடோசோபசார தீபாராதனைநடைபெறுகிறது. இப்பெரியநாயகர் கோயிலின் வாயிலில் தென்பக்கம் வடக்கு முகமாகக் குவித்த கையுடன் ஓர் உருவம் உளது. வையப்ப கிருஷ்ணமநாயகர் என்று அருகில்அதன்பெயருப் பொறிக்கப்பட்டுள்ளது.அதன் நேர் வடபுறம் தெற்கு முகமாக ஒருபெண் உருவம் உளது.பெயர் தீட்டப்படவில்லை. ஆயினும்,அது இந்நாயக மன்னரின் மனைவியாக இருக்கக்கூடும் என்பர். இவ்வாயிற்படிக்கு வெளியிலுள்ள மேடைத் தூண்களில் துறவிபோன்ற சிறிய உருவங்கள் இரண்டு உள்ளன. பெயர் பொறிக்கப்படவில்லை.

அவ்விசை மண்டபத்தின் வடபுறம் அம்பலக்கூத்தரின் (நடராசர்)மண்டபம்உளது. அது கீழ்மேல் நீண்டு மேடையாக உளது. நடுவில் தேவர்களுக்குத் திருநடனக்காட்சி தந்த அம்பலக்கூத்தர் தெற்குமுகமாகஉள்ளார்.கண்டு தரிசித்திடுக; இன்பம் எய்திடுக. அம்மேடையின் தென்புற விளிம்புத் தூண் ஒன்றில் கிழக்குமுகமாகஅரசர் உருவம் ஒன்றுஉளது. அதன் கீழ்புறத் தூணில் மேற்கு முகமாகத் துறவி உருவம்

ஒன்றுஉளது. இரண்டிற்கும்பெயர்எழுதப்படவில்லை. இசை மண்டபத்தின் நடுவிலுள்ள தூண் ஒன்றில், வடக்கு முகமாகப் பெரும் தோற்றமுள்ள அரசன் உருவம்ஒன்றுஉளது. அதன்கீழ்புறத்தூணில் வடக்கு முகமாகப் பெருந் தோற்றமும் தலைப்பாகையுமுள்ள உருவம்ஒன்றுஉளது. இவற்றிற்கும் பெயர் பொறிக் படவில்லை. இத்துடன் வன்னியடிப் பிரகாரம் முடிவடைந்தது.

அடுத்தது மூன்றாவது(உள்)சுற்றுமதில் அதுகீழ் மேல் 220 அடியும் தென்வடல் 112 அடியும் உள்ளது. $3\frac{1}{2}$அடி கனமும் 30அடிஉயரமும் வாய்ந்தது. கீழ்பால் மொட்டைக்கோபுரவாயில்உளது. அக்கோபுரவாயில் மிக்கவனப்பமைந்த வேலைப்பாடுள்ளது. அதன்இரு பக்கங்களிலும் நான்குபெரியகல்வெட்டுகள் உள்ளன. அவ்வாயிலின் ப்க்கத் தளவரிசைச்சுவரில் மேல்பக்கம் இருபுறங்களிலும்பல கல்வெட்டுகள் உள்ளன. அவற் றுள் ஒன்றேவெளிவந்துளது. ஏனைய எடுபடவில்லை. அவ்வுட்பிரகாரத்திற்கு அறுபத்து மூவர் பிரகாரம் என்று பெயர். முன்னால் உட்பிரகார நந்தியும் பலி பீடமும் உள்ளன. உள்தென் பிரகாரத்தின் தென்பக் கத்தில்முறையே சைவசமய ஆசாரியர்களான திரு ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும்நால்வருடன், பிள்ளையார், சிவனடி யார்களான அறுபத்துமூன்று நாயன்மார்கள், அதிபக் தர்கள் பதின்மர், இடபாரூடர், யோகதக்ஷணாமூர்த்தி, சப்தமாதர்கள், உருத்திரர், பதினொருவர், மாற்று ரைத்தபிள்ளையார்முதலிய உருவங்கள்உள்ளன. அத் தென் பிரகாரத்தின் வடபக்கம் கிழக்கிலிருந்து

முறையேவருணலிங்கம்,முப்பிள்ளையார், உருத்திரபர்தம்,தக்ஷிணாமூர்த்திமுதலியஉருவங்கள்உள்ளன. உட்பிரகாரத்தின் மேல்பக்கம் தெற்கிலிருந்து முறையே சின்னபழமலைநாதர்(உற்சவர்),வள்ளியம்மை, தெய்வயானைஉடனுள்ளஆறுமுகக்கடவுள்,வல்லபைக் கணபதி, பிந்துமாதவப் பெருமாள், மயூர முருகக்கடவுள் முதலிய உருவங்கள் உள்ளன. இங்கு பிந்துமாதவப் பெருமாள்இத்தலத்தில் கோயிலினுள் அமையப் பெற்றது காசிக்ஷேத்திரத்தை ஒட்டியதாகும். ஆகையினாலே இந்தக்ஷேத்திரத்திற்கு விருத்தகாசி என்பதும் காசியினும் வீசம்பங்கு விசேஷமகிமை உடையது என்பதும் புராண வரலாறு.

அப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் இளமை நாயகியார் கோயில் கிழக்கு முகமாக உளது. ஆங்கு கருணைஉருவாம்இளமைநாயகியார் (பாலாம்பிகை) மலர்ந்தமுகத்துடன் சிறந்துவிளங்குகின்றார். கண்டு வழிபடுக. இன்பஅருள்பெறுக. பெரியநாயகியார்,குரு நமசிவாயருக்கு இளமைநாயகியாக வந்து சோறு படைத்த காரணத்தால் இப்பதியில் இளமைநாயகியார்கோயில்தனியாக ஏற்பட்டுள்ளது. வடக்கு உட்பிரகாரத்தில் வடபுறம் கிழக்குமுகமாகத் திருமகள் கோயில்உளது. அவர் கஜலட்சிமியாக விளங்குகிறார். தென்புறம் தெற்குமுகமாகச் சண்டேசுரர் கோயில் உளது. அவ்வடபுற மண்டபத்தின் நடுவிலுள்ள தூண் ஒன்றில்வடக்குமுகமாக ஏழுசாண்உயரத்தில்ஒன்றும், அதன் அடியில் மேற்குமுகமாக நாலரைசாண் உயரத்

தில்ஒன்றுமாகஇரண்டுஆடவர் உருவங்கள்உள்ளன. அதன்நேர் வடபுறத் தூணில் தெற்கு முகமாக ஏழு சாண்உயரத்தில் ஒன்றும், அதன் அடியில் மேற்கு முகமாக நாலரைச்சாண் உயரத்தில் ஒன்றுமாக இரண்டு ஆடவர் உருவங்கள் உள்ளன. ஒன்றிற்கும் பெயர்கபாறிக்கப்படவில்லை. உட்பிரகாரத்தின் வட கீழ்பால் தெற்கு முகமாகவுள்ள நிலையம் பலவகை உற்சவமூர்த்திகள் இருப்பிடமாகும். வடகீழ்க் கோடியில் காலபைரவர் உள்ளார். இக்காலபைரவரும் காசி க்ஷேத்திரத்தை ஒட்டி அமைக்கப்பெற்றது என்பர். அதன்தென்பால்சூரியலிங்கமும்,சூரியஉருவமும் உள்ளன. இத்துடன் உட்காரமும் பரிவாரதெய்வங்களும முடிவு பெற்றன.

உட்பிரகாரத்தின் முன்னாலுள்ளது மகா மண்டபம். அதுகீழ்மேல் நீண்டு விரிந்துளது. அதற்கடுத்து உள்ளேஇருப்பதுஸ்தபநமண்டபம்.அதுமிகச்சிறியது. திருமஞ்சனப் பொருள்களை வைத்து மந்திர செபம் செய்யும்இடம் இதுவாம். இம்மண்டபத்தின் மேல்பக்கம் தென்புறமாக ஐந்துசாண் உயரத்தில் வடக்குமுகமாய்ஒருசிவனடியார்உருவம்உளது. அதன் நேர்வடபால் தெற்கு முகமாக ஒருமுனிவர் உருவம் உளது. இரண்டிற்கும்பெயர்தெரிந்திலது.இந்தஸ்தபநமண்டபம் மகாமண்டபங்களின் தென்பக்கச்சுவரில்11ம், வடபக்கச்சுவரில்10-ம் கீழ்பக்கச் சுவரில்வாயிலுக்கு இடது புறம் 2-ம் ஆக 23 கல்வெட்டுகள் உள்ளன. மற்றும் எடுக்கமுடியாத சில கல்வெட்டுகளும் அவற்றில் உள்ளன. ஸ்தபந மண்டபத்தை அடுத்து உள்ளுள்ளது இடைகழி மண்டபம். அதில் தெற்கு முகமாகவும்,

வடக்குமுகமாகவும் இருவாயில்கள் உள்ளன. நடுவில் உள் நந்தியும், பலிபீடமும உள்ளன. அதனைஅடுத்து உள்ளே அருத்தமண்டபத்தோடு கூடிய மத்திய கோயில்தனியாகஉளது. அருத்தமண்டபத்தின் வாயிலின் இருபக்கமும் முன்புறத்தில் இருவாயில்காவலர் (துவாரபாலகர்) உருவங்கள் உள்ளன. அவைமிக்க வேலைப்பாடுடன் அமைந்துகம்பீரமாக நிற்கின்றன. அருத்தமண்டபத்தில் தென்புறம் பிள்ளையார் உள்ளார். மத்தியகோயிலில் (கருப்பக்கிருகத்தில்) நம்அண்ணல் பழமலைநாதர் அருவாய்உருவாய் அருவுருவாய் விளங்குகின்றார். கண்டு தரிசித்திடுக; கருணை எய்திடுக; கவலைநீங்கிடுக; இன்பம்நுகர்ந்திடுக.

வெளி நந்தவனம்: இது, கோவிலுக்கு முன் கீழ்ப்பால் ஆற்றங்கரையையொட்டி இருக்குறது. இதன் விஸ்தீரணம் சுமார் 3 ஏக்கர், இதில்ஒருபெரிய கிணறு, அதில் 3 குதிரைபலமுடைய மின்சார மோட்டார்பம்பு வைத்துத் தண்ணீர் ஏராளமாய்ப்பாய்கிறது. தேவஸ்தானத்தார் பராமரிப்பில் இருந்துவருகிறது.

புராணவரலாறு: ஆதியில் பிரம்மன் மண்ணுலகைப்படைக்க எண்ணி முதலில் நீரைப் படைத்தார். திருமால் அப்பொழுதுதீயவர்களான மதுகடவர்களை வெட்டிவீழ்த்த நேர்ந்தது. வெட்டுண்ட அவ்வுடல்கள் பிரம்மன் படைத்த நீரில் வீழ்ந்துமிதந்தன. நான்முகன் அதைக்கண்டார். நீரும் அவ்வுடற்றசைகளும் ஒன்றாக இறுகி மண்ணுலகம் தோன்றுமாறு சிவபெருமானை வேண்டினார். சிவபெருமான் ஒரு மலை வடிவாகத் தோன்றி எதிர்நின்றார். மலரவன் அதனை அறியாது தான் வேறுபல மலைகளைப் படைத்தார்.

தான்படைத்த மலைகளுக்கு இருக்க இடம் இல்லை· பெரிதும் வருந்தி மயங்கிநின்றார். பிரணவக்கடவுள் தோன்றிக்குறிப்பால் உண்மையை உணர்த்தினார். நான்முகன் நல்லறிவுபெற்று உடனே மலைவடிவாய் நின்றசிவபெருமானை வழிபட்டு பூசித்தார்.

சிவபெருமான், மேதையும் (தசையும்) நீரும் ஒன்றாகஇறுகி மண்ணுலகம் தோன்றுமாறு செய்தார். அதற்கு மேதினி என்று பெயரிட்டார். மலரவன் படைத்த மலைகளுக்கும் இடம் தந்தார். மலரவனை நோக்கி "ஏ அறிவிலி! நாமே இம்மலை வடிவாகத் தோன்றி நின்றோம். நான்வேறு இம்மலைவேறு இல்லை. இந்தமலை தோன்றியபின்னரே உன்னால் பல மலைகள் தோன்றின. ஆதலின், நம்மலைக்குப் பழமலை என்றே பெயர் வழங்குவதாக, மற்றும் இப் பழமலைமண்ணுலகுக்கு அச்சாணியாக அழுந்தி நின்று மேலே சிவலிங்கமாக விளங்கி நிற்கும். இதனை வழிபட்டோர்எவரும்விரும்பியபயனைஎய்தி இன்புறுவர்" என்று அருள்செய்து மறைந்தருளினார் என்பர்.

பின்னர், திருமால்பிரான் இந்திரனாகிய தேவர்கள்யாவரும்பழமலைநாதரைப் பூசித்தே தத்தம் பதவிகளைப்பெற்றனர். ஒருசமயம்திருமாலாதியதேவர்கள் வந்து இப்பழமலைப்பதியில் தங்கிக் கடுந்தவம் செயதார்கள். அத்தவத்தீயின் வெப்பத்தால் பிரம்மானந்த வெள்ளம் பெருக்கெடுத்து வழிந்தது. அதனைப் பழமலைநாதர் தம்திருக்கையாற்றடவித்திருமணிமுத்தாறாகத் திகழச்செய்தார். அது அருளுருவாகிய சிற்சக்தி வடிவாகவும் பாவங்களுக்குத் தீயாகவும் விளங்கி நின்றது. இதன்பெருமைக்கு அளவே இல்லை. இதனால்

பயன் பெற்றோர் எண்ணிறந்தோராவார். இன்றும் இறந்துபட்டவர் என்புகளை இவ்வாற்றில் இடுகின்றனர். அவையாவும் கல்லாக மாறுகின்றன. அந்த என்பிற்குரிய உயிர்கள் நற்பயன் அடைந்தமைக்கு அறிகுறியாகச் சிற்சக்தியாம் மணிமுத்தாறு, பழமலை வடிவாம் கல்லாக அந்தஎன்புகளை மாற்றிவைக்கின்றது என்பர். இப்புண்ணியத் திருமணிமுத்தாற்றில் நீராடிப் பழமலைநாதரைப் பூசித்துத்தேவர்முனிவர்எண்வகை சித்தி பெற்றார். சுக்கிராச்சாரியார் நீராடிப் பூசித்து அசுர குருவானார். யாக்ஞவல்கியர் முனிவர் நீராடிப் பூசித்து மிருத சஞ்சிவனம் என்னும் மந்திரசித்தி பெற்றார். சித்திரச்சிகண்டியும் கோசிகனும் நீராடிப் பூசித்து மறை முனிவரானார்கள். விதர்க்கண செட்டி நீராடிப்பூசித்துசிவகணமானார். பிறவிக்குருடன் ஒருவன் நீராடிப்பூசித்துக் கண்பெற்றான். கொடிய பிணியாளர்அறுவர் நீராடிப்பூசித்து பிணிநீங்கி நலமெய்தினர். விபசித்துமுனிவர் நீராடிப்பூசித்துமுத்திபெற்றார். இந்தவிபசித்து முனிவரேஆதியில் பழமலைநாதருக்கு கோயில்திருப்பணி செய்துவைத்துள்ளார். தேவர்கள் நீராடிப் பூசித்துத் திருநடனக்காட்சி பெற்றுள்ளார். குறுமுனிவர் நீராடிப்பூசித்து ஊனுண்ட வினைநீங்கப் பெற்றார். கலிங்கன் நீராடிப் பூசித்துப் பேய்வடிவம் நீங்கப்பெற்றான். முனிவர்கள் நீராடிப் பூசித்துக்கலியின்வலிமைஒழியப்பெற்றார். சுவேதமன்னர் நீராடிப் பூசித்துநந்திபதம்பெற்றார். நாதசர்மா, அநவர்த்தினி என்பவர் நீராடிப் பூசித்துச் சாரூபப் பதவி பெற்றனர் என்பர். இத்துடன் தலபுராணத்தில் கூறப்படும் வரலாறுகள் முடிவுற்றன.

பின் கூறப்படும் வரலாறுகள் கேள்வி வகையா லும், பலநூல்களின் துணையாலும் எழுதப்பட்டன.

சைவ சமயாச்சாரியர்களான திருநாவுக்கரசு நாயனாரும், திருஞானசம்பந்த நாயனாரும் கி.பி. ஏழாம்நூற்றாண்டில் இருந்தவர்கள். அவர்களுள், திருநாவுக்கரசு நாயனார் நம் பழமலைநாதர் மேல் 'கருமணியை கனகத்தின் குன்றொப்பானை'' என் னும் திருத்தாண்டகம் பாடித் தரிசித்து இன்புற்றுள் ளார். திருஞானசம்பந்த நாயனார் ''மத்தாவரை நிறுவி''என்னும் பதிக முதலிய எழுவகைத் தேவாரப் பதிகங்கள்பாடித் தரிசித்து இன்புற்றுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. ஒன்பதாம் நூற் றாண்டில் இருந்தவர். அவர் பழமலைநாதர்மேல் ''நஞ்சியிடை யின்று நாளை'' என்னும் திருப்பதிகம் பாடிச் சிலநாள் முதுகுன்றிலே தங்கியிருந்தார். மற்றொரு நாள், பொன்வேண்டும் எனனும் குறிப் போடு ''மெய்யை முற்றப் பொடிபூசியோர் நம்பி''என் னும் பதிகம்பாடினார். பழமலைநாதர், குறிப்பு உணர்ந்து பன்னீராயிரம் பொன் கொடுத்தருளினார் அதனைக்கண்டசுந்தரர்,இப்பொன்னெல்லாம் ஆரூர் வந்து கிடைக்குமாறு அருள்செய்ய வேண்டும் என்று மீண்டும் வேண்டினார். பழமலைநாதர் 'சுந்தரனே! நீ இப்பொன்னை திருமணிமுத்தாற்றில் இட்டுச் செல்க. ஆரூரிலுள்ள கமலாலயத்தில் கிடைக்குமாறு செய்வோம்' என்றுவான்மொழி வாயிலாக அருள் செய்தார். சுந்தரரும் மச்சம்வெட்டிஎடுத்துக்கொண்டு பொன்முழுவதையும் திருமணிமுத்தாற்றில் புகவிட்டு ஆரூர் சென்றனர்.

ஒருநாள், "திருமுதுகுன்றர் தந்த பொன்னைத் திருமணிமுத்தாற்றில் இட்டுவந்துள்ளேன். அதனை இங்குள்ள கமலாலயத்தில் எடுத்துவருவோம்வா'' என்று பரவையாரை உடனழைத்தார். பரவையார், ''இது என்னவியப்பு''என்று புன்னகைசெய்துஉடன் சென்றார். சுந்தரர் பரவையாருடன் பூங்கோயில் புகுந்து வான்மீகநாதரை வணங்கிக்கொண்டு கமலாலயம் சென்றார். பரவையாரைக் கரையில் நிறுத்தி வைத்துத் தான் குளத்திலே இறங்கினார். முழுகித் தடவிப் பார்த்தார், கிடைத்தில. பழமலைநாதர், சுந்தரரைக் கொண்டு மற்றும் திருப்பதிகம் பாடுவிக்கவேண்டும் என்றுவிரும்பினார். பொன்னை வருவியாது காலந் தாழ்த்தினார். பரவையார் நகைத்து,'ஆற்றிலேஇட்டுக் குளத்திலே தேடுகிறீரா?' என்றார். அதைக்கேட்ட சுந்தரர் மனம் வருந்தித் திருமுதுகுன்றர்மேல் "பொன்செய்த மேனியீர்'' என்னும் திருப்பதிகம் பாடிப் பொன்னைத் தருமாறு வேண்டினார். பொற்குவியல் வந்த எய்தியது. கரையேற்றி மச்சத்தோடுஉரைத்து ஒத்திட்டுப்பார்த்தார். இதுஉரை தாழ்ந்திருந்தது. மீண்டும் சுந்தரர், உரை தாழாதிருக்க வேண்டுமெனப் பாடினார். பழமலைநாதர் உரைதாழாதிருக்குமாறு அருள் செய்தார். பரவையாரும் சுந்தரரும் பழமலைநாதரின் திருவருளைஉன்னிஉன்னிவாழ்த்திஇன்புறலாயினர்.

கி.பி. 12-ம் நூற்றாண்டின் இறுதியில், காடவர் தலைவர்களான கச்சிராயர் என்பவர்கள் இந்நடுநாட்டில் அரசு செலுத்தி வந்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர்சிவநெறிச்செல்வராகவாழ்ந்துவந்தனர்.அவர் திருமுதுகுன்றின் வடகீழ்பால் எட்டுக்கல்தொலைவில்

உள்ள முதுநெய் யென்னும் நகரில் தங்கிஇருந்தனர். ஒவ்வொருநாளும் தவறாதுவந்து பழமலைநாதரைத் தரிசித்துச்செல்வார். எவ்வளவு இடுக்கண் நேரினும் பழமலைநாதரை வந்துதரிசிக்காது உணவருந்தார். பழமலைநாதர் அவரது அன்பிற்கிரங்கி அருள் புரிய எண்ணினார். தாமேபெரியநாயகியாருடன் அம்முது நெய் என்னும் பதியில் திருவுருக்கொண்டு எழுந்தருளிக் காட்சிதரலானார்.

அந்த கச்சிராயமன்னர் கண்டு தரிசித்து, பிறந்த தன் பயனைப் பெற்றேம் பெற்றேம் எனப் பெருமகிழ் வெய்தினார். உடனே பழமலைநாதருக்கும் பெரிய நாயகியாருக்கும் திருக்கோயில் வகுத்தார். நாள் விழா, ஆண்டுவிழா, முதலியனஇனிது நடைபெறுமாறு செய்தார். வாழ்நாள்முழுவதும் அன்பாரப் பூசித்து அரனடி சேர்ந்தார். அதுமுதற்கொண்டு பழமலை நாதர் முதுநெய் என்னும் பதியிலும் தன்னை வழி படுவோர்க்கு அருள்செய்து வருகிறார்.

கி.பி. பதினாராம் நூற்றாண்டில் ஞானக்கூத்தர் என்னும் பெயருடைய சிவஞானச்செல்வர் ஒருவர் இருந்தார். அவரே திருமுதுகுன்றத் தலபுராணத்தை தமிழிற்பாடிய பெரியார்ஆவர். அவர் நெடுநாள் பழ மலைப் பதியில்தங்கிப் பழமலைநாதரையும் பெரிய நாயகியாரையும் தரிசித்துவந்தார். அக்காலத்தே, பழ மலை எல்லைக்குள், தான் மலமூத்திரங்களைக் கழிப்ப தில்லை என்ற கொள்கையுடையவராயிருந்தார். உடல்தளர்ந்தபின் அக்கொள்கைக்கு இடர்நேர்ந்திட வருந்தினார். அருள் உருவாம் பெரியநாயகியார் காட்சிதந்து, "அன்பனே! ;நீ, சிவன்பாக்கம் சென்று தங்கியிருப்பாய். அவ்விடம் வந்து நாமே காட்சி

தருவோம்'' என்று அருள்செய்து மறைந்தருளினார். ஞானக்கூத்தரும் அவ்வாறே திருமுதுகுன்றின் நேர் மேற்கில், சுமார் பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள சிவன்பாக்கத்தே தங்கியிருந்துதவம்கிடந்தார். பெரிய நாயகியாரும் அவருக்கு காட்சிதந்து வரலானார். இறுதியில் ஞானக்கூத்தர் அவ்விடத்திலேயே சிவானந்தப்பேரொளியில் கலந்தருளினார். ஞானக்கூத்தருக்கு ஆங்கேகோயிலும் ஏற்பட்டுள்ளது. அக்கோயில் துறையூர் ஆதீனத்தாரின் மேற்பார்வையில் இருந்து வருகின்றது.

கன்னடநாட்டுமன்னர் ஒருவர் கி.பி.பதினாறாம் நூற்றாண்டில் துறவுபூண்டு வெளியேறினார். அவர், பேரையூர் சாந்தலிங்கவடிகளிடம்சிவஞானஉபதேசம் பெற்றுக்கொண்டு திருமுதுகுன்றம் வரலானார். வழியிடையில் அருந்தநீரின்றி நாவரண்டுபெரிதும்வருந்தலானார். 'அடியார்க்கெளியராம் பழமலைநாதர், வழியிடையில் தண்ணீர்ப் பந்தல் வைத்து நீர்கொடுத்து ஆதரித்தார். மன்னர்துறவி, நீரருந்திகளை நீங்கி முதுகுன்றம்வந்தார். பசிப்பிணி வருத்தியது மெய் சோர்ந்து ஓர் அரசமரத்தடியில் படுத்து நாயகியைச் சிந்தித்திருந்தார். அன்னை பெரியநாயகியார் மனம் இரங்கினார். முதியவள்போல் உருவந்தாங்கி வந்து மன்னராம் துறவியை மடிமேல் எடுத்திருத்தினார். தாம் பொன்வள்ளத்தில் கொண்டு வந்த பாலை அவருக்குப் புகட்டினார். அவர், களை நீங்கி கண் விழித்துப பார்த்தார்; வியப்புற்றார்; 'நீ யாரம்மா?' என்றார்.

பெரியநாயகியார், 'அப்பா! குமாரதேவா! நான் தான் நினது அன்னை பெரியநாயகியார். நின் பசி

யாற்ற வந்தேன். நீ இங்குதானே இருப்பாயாக' என்று அருள்செய்து மறைந்தருளினார். அது முதல் அவருக்கு குமாரதேவர் என்றபெயர் வழங்கலாயிற்று. குமாரதேவர், பெரியநாயகியார்மேல்'விரிவுறு முருவ நாமமதகற்றின்' என்னும் திருப்பதிகம்பாடி அப்பதி யிலேயே தங்கியிருந்தார். இடையிடையேபல அற்புத திருவிளையாடல்கள் புரிந்துவந்தார். தான் அனு பவித்த சிவானுபவஉண்மைகளைத்தமிழில் பதினாறு நூல்களாகப் பாடியருளினார். வாழ்நாள் இறுதியில் ஒரு புரட்டாசித்திங்கள் பூரஓரையில், சிவானந்தப் பேரொளியில் இனிது கலந்தருளினார். இவரது கோயில் திருமுதுகுன்றின் தென்கீழ்மூலையில் உளது.

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில், குருநமசி வாயர் என்னும் பெயருடைய சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் தாமிருந்த திருவண்ணாமலையை விட்டுத் தில்லை செல்ல வந்தார். வழியிலுள்ள திருமுதுகுன்றில் ஒருநாள் இரவு தங்க நேர்ந்தது. பழமலைநாதரையும் பெரியநாயகியாரையும் தரிசித் துக்கொண்டு கோயிலினுள் ஒருபக்கத்தே படுத்திருந் தார். பசிப்பிணி வருத்தியது. அவர் பசிமிகுந்த போதெல்லாம் அம்பிகையைப்பாடி, அவரளிக்கும் உணவை உண்பவர் ஆதலின், அவ்வழக்கப்படி இங் கும் பெரியநாயகியாரை நினைந்து,

"நன்றிபுனையும் பெரிய நாயகி யெனுங்கிழத்தி
என்றும் சிவனாரிடக்கிழத்தி — நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நிலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா"

என்று ஒருவெண்பா பாடினார். பெரியநாயகியார்ஒரு முதியவள்போல் எதிர்வந்து "ஏனப்பா என்னைப் பல

வாற்றாலும் கிழத்தி'' எனப்பாடினாய்? கிழத்தி சோரும் நீரும் எவ்வாறு எடுத்துவரஇயலும்?என்றார் அதுகண்ட குருநமசிவாயர்,

"முத்தநதி சூழும் முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே — அத்தன்
இடத்தாளே முற்றா இளமுலைமே லார
வடத்தாளே சோறுகொண்டு வா''

எனமீண்டும் திருபபிப் பாடினார். பெரியநாயகியார் மகிழ்ச்சியுற்று உடனே இளமை நாயகியாகி சோறும் நீரும்படைத்தார். குருநமசிவாயர் உண்டு பசியாறி இனிது மகிழ்ந்தார். அதன் பின்னரே இவ்வூரில் இளமைநாயகியார் கோயில் தனியே ஏற்பட்டது. இந்த இளமை நாயகியார் கோயில் அறுபத்துமூவர் பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் இருக்கின்றது. இவ்வம்மையைப் பாலாம்பிகை என்றும் கூறுவர்.

திருச்சிஜில்லா பெரம்பலூர்தாலுக்காவில் வெங்க னூர் என்னும்பதி ஒன்றுளது.அதில்கி.பி.பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலிங்க ரெட்டியார் என் னும் பெயருடைய சிவநேசச் செல்வர் ஒருவர் இருந் தார். அவர், பழமலைநாதரை ஒவ்வொரு பிரதோட காலத்தினும் தவறாது வந்து தரிசித்துச் செல்வார். தான்வரும்பொழுது தன்அருமைக் குமாரர் அண்ணா மலை ரெட்டியாரையும் உடனழைத்து வருவது வழக் கம். ஒரு பிரதோடகாலத்தன்று வழக்கம்போல் குமார ரும் தானும் குதிரையில்வந்தனர். வழியிலுள்ள வெள் ளாறு இருகரையும் நீர்புரண்டு வெள்ளப பெருக்காய் இருக்கக்கண்டார். கடக்க வேறு வழியில்லை. பழ மலை நாதரிடத்து நான்கொண்ட அன்பு உண்மை அன்பாக இருக்குமாயின் ஆறுகடந்து செல்வேன்.

இல்லையேல் இறந்துபடுவேன்'' என்று உறுதி கொண்டார். பழமலைநாதரைச் சிந்தித்தபடியே ஆற்றில் இறங்கினார். இருவரும் இடறின்றி ஆற்றைக் கடந்து கரையேறினர். பிரதோடகாலம்தவறாது பழமலை வந்து தரிசனம் செய்துகொண்டு அன்றிரவு அவ்விடம் தங்கியிருந்தனர். பழமலைநாதர் இலிங்க ரெட்டியார் கனவில்தோன்றி ''அன்பனே இனிமேல் நீ இங்குவாரற்க. நாமே நின்ஊரில்வந்து காட்சி தருவோம்'' என்றுஅருள்செய்து மறைந்தருளினார்.

இலிங்கரெட்டியார், பழமலைநாதர் திருவருளை வியந்து வாழ்த்தித் தன்னூர் சென்றனர். பழமலைநாதர், பெரியநாயகியாருடன் திருவுருக் கொண்டு வெங்கனூரில் எழுந்தருளி காட்சிதந்தார். இலிங்க ரெட்டியார் கண்டுதரிசித்து அன்பார வாழ்த்தினார். உடனே பழமலைநாதருக்கும் பெரிய நாயகியாருக்கும் திருக்கோயில்வகுக்கத்திருப்பணி ஆற்றிவந்தார். திருப்பணி முடிவதற்குள் இலிங்க ரெட்டியார் சிவ பெருமானாரது திருவடி நிழலில் கலந்தருளினார். அவர் குமாரர் அண்ணாமலை ரெட்டியார் எஞ்சிய திருப்பணிகளை இனிது முடித்து சகாப்தம் 1545ல் (கி.பி. 1623 ல்) கும்பாபிடேகம் செய்தருளினார். இன்னும் அவர் பரம்பரையினராலேயே அக்கோயில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

திருப்பணி : ஆதியில் விபசித்துமுனிவர் என்பவர் (முதன் முதல்) பழமலைநாதருக்குக் கோயில் திருப்பணி செய்ததாகத் தலபுராணங் கூறுகின்றது. பின்னர் கி.பி.பத்தாம்நூற்றாண்டிறுதியில் கண்டராதித்த சோழன்மனைவி செம்பியன்மாதேவியரால் திருப்பணி

செய்யப்பட்டிருக்கிறது. அதாவது பழமலைநாதர் இருக்கும் மத்தியகோயில், ஸ்தபன மண்டபம், உள் சுற்றுமதில்,அச்சுற்றுமதிலைஅடுத்துஉள்ளுள்ள இரு தூண் அகலமுடைய சுற்றுத்தாழ்வாரம், உட்பிர காரத்துள்ள இளமை நாயகியார்கோயில் நீங்கிய ஏனைய பரிவாரக் கோயில்கள், இரண்டாவது சுற்றுமதில், அதிலுள்ள எழுநிலைக்கோபுரம், வன்னி யடிப் பிரகாரத்துள்ள பரிவாரக்கோயில்கள் முதலா னவை அச்செம்பியன்மாதேவியார் செய்த திருப் பணிகளாம். (சான்று 1918-47-வா-7 கல்வெட்டு)

உட் பிரகாரத்துள்ள மகாமண்டபம் கட்டியது இன்னாரெனத்தெரிந்திலது. ஆயினும் அம்மண்டபச் சுவர்களில் இராஜராஜசோழன் கல்வெட்டு இருக்கின் றது. இவ்விராஜராஜசோழன் கண்டராதித்த சோழ னுக்குஅடுத்தபடியாகபட்டத்திற்குவந்தவனாதலின், இம்மண்டபம் இவன்காலத்து திருப்பணியாக இருக் கக்கூடும். உட்பிரகாரத்துள் செம்பியன்மாதேவியார் வகுத்துள்ள சுற்றுத்தாழ்வாரத்திற்கும் மத்தியகோயி லுக்கும் இடையிலுள்ள இடைவெளி மண்டபத்தையும் இளமைநாயகியார் கோயிலையும் கட்டியவர் பெயர் தெரிந்திலது. ஆனால்பெரிய நாயகியார் இளமை நாயகியாராகச் சென்று குருநமசிவாயருக்குச் சோறு படைத்த வரலாறு நிகழ்ந்தது. கி.பி.பதினாறாம் நூற் றாண்டின் இறுதியில் அதனால் அதை ஒட்டிப் பதி னேழாம் நூற்றாண்டில் இத் திருப்பணிகள் நடந் திருக்கவேண்டும் என்பர்.

வன்னியடிப்பிரகாரத்துள்ள இசை மண்டபத்தை மூன்றாம் குலோத்துங்கசோழன் பட்டத்திற்கு வந்த

பதினைந்தாம்ஆண்டில் (கி.பி.1193ல்) ஏழிசை மோக னான குலோத்துங்கசோழக் காடவராதித்தன் என்ப வன் கட்டி ஏழிசை மோகன்றிரு மண்டபம் என்று தானே பெயரும்இட்டுள்ளான். சான்று மகாமண்டபத் தின் கீழ்பாற்சுவரிலுள்ள கல்வெட்டு (1900-137-வா -7) மற்றும் அவ்விசைமண்டபத்தில் காணப்படும் முடி யுள்ள உருவம் குலோத்துங்க சோழனுடையது என வும் தலைப்பாகையுள்ள உருவம் ஏழிசைமோகனுடை யது எனவும் கூறுகின்றனர். இன்றளவும் இம்மண்ட பத்திற்கு இசைமண்டபம் என்றேபெயரும்வழங்கிவரு கின்றது. அம்பலக்கூத்தர் திருமண்டபம் வகுத்தவர் இன்னாரெனத் தெரிந்திலது. அம்மண்டபத்துள்ள கத்தி இடையிற் செருகிய அரசன் உருவத்தையும், முழங்காலளவோடு ஆடையுள்ள துறவி உருவத்தை யும் கொண்டு. இதுசோழர்காலத்தே ஒரு துறவியால் கட்டப்பட்டது என்பர். பெரியநாயகர் மண்டபம் வையப்ப கிருஷ்ணமநாயகரால் கட்டபபட்டுள்ளது. சான்றுஅம்மண்டப வாயிலில் அவரதுஉருவமும்பெய ரும் இருப்பதுவேயாம்.

கொடிமர மண்டபம் கட்டியவர் இன்னாரெனத் தெரிந்திலது. அம்மண்டபத்துள்ள அரசன் உருவத் தையும் அரசிஉருவத்தையும் கொண்டு அதுபிற்கால நாயக மன்னர்களின் திருப்பணியாகவே இருக்கக் கூடும்என்பர். உள்மடப்பளியை கச்சிராயன் எனும் அரசநாராயணன் ஏழிசைமோகன் என்பவன் கட்டி யுள்ளான். அவன்காலம் தெரிந்திலது. சான்று, அம் மடப்பளியின் வடபுறச்சுவரிலுள்ள கல்வெட்டு (1918 -65-வர-4). நூற்றுக்கால் மண்டபம். அரச நாராய ணன் ஆளப்பிறந்தானான வீரசேகரக் காடவராயன்

என்பவனால் கட்டப்பட்டுள்ளது. சான்று அம்மண்டபத் தளவரிசையின் தென்புற விளிம்புக்கல்லில் உள்ள கல்வெட்டு, (1935-99-x-வால்-7) இக்கோயிலின் இரண்டாவது கோபுரத்தில் வாயிற்படியின் வலதுபக்கச் சுவரில்இவ்வீரசேகரக்காடவராயனின்கல்வெட்டு மற்றொன்றும்உளது. அதில் தான் அதியமான் நாட்டை (சகாப்தம் 1108ல்) அழித்ததாகக் கூறிக்கொள்கிறான். அதனால் இவன் காலம் கி.பி. 1186 ஆகும். இம்மண்டபம் கட்டிய காலமும் அப் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியாகவே இருக்கக்கூடும்என்பர்.

பெரியநந்தி மண்டபத்தைக்கட்டியவர் இன்னாரெனத் தெரிந்திலது. அம்மண்டபத் தூண்களைக் கொண்டுபிற்கால நாயகமன்னர்களின் திருப்பணியாக இருக்கக்கூடுமோ என்று எண்ணுகின்றனர். அதன்கீழ்பாலுள்ள தரிசனமண்டபம் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இத்தாலுக்கா பெரம்பலூர் கிராமத்திலிருந்த உடையார் ஒருவரால் கட்டப்பட்டது. அப்பரம்பரையினரே இன்னும் மாசிமகம் ஆறாம் நாள்விழாவை நடத்தி வருகின்றனர். பெரியநாயகியார் கோயில்திருப்பணிசெய்தோர் பெயரும்காலமும் தெரிந்திலது. ஆனல்,அது மிகப்பழமையாகக் காணப்படுகிறது. அதைக்கொண்டு அத்திருப்பணி சோழமன்னர்களின் காலத்ததுவாகவே இருக்கக்கூடும்என்பர். பெரியநாயகியார் கோயிலின் உள்ளுள்ள பெரிய மண்டபத்தையும் அதனோடு தொடர்ந்துள்ள சுற்றுத் தாழ்வார மண்டபத்தையும் கி.பி. பதினாராம் நூற்றாண்டில் ஓர் உழவர் கட்டியதாகத் தெரிகின்றது. சான்று குமாரதேவர் ஒருழவரைக் கொண்டு பெரிய நாயகியாருக்குமண்டபம் வகுத்ததாக அவர் வரலாற்

றில் கூறப்படுவதால் அறியக்கிடக்கின்றது. அதன் வெளியிலுள்ள அலங்கார மண்டபத்தைக் கட்டினோர் இன்னாரெனத் தெரிந்திலது. அம்மண்டபத்திற் காணப்படும் அரசன் உருவத்தையும் அரசி உருவத்தையும் கொண்டு அதுபிற்கால நாயக மன்னர்களின் திருப்பணியாக இருக்கக்கூடும் என்பர்.

புறச் சுற்றுமதிலையும், அதிலுள்ள எழுநிலை கோபுரம் நான்கினையும், கி.பி. பதினாறாம் நூற்றாண்டிலிருந்ததஞ்சைநாயகமுதலரசரான செவ்வப்ப நாயகமன்னன் கட்டினன்என்பர். சான்று, செவ்வப்ப நாயக மன்னரின் பேரன் இரகுநாதநாயகன். அந்த இரகுநாதநாயகரின்தாசி இராமபத்திராம்பாள். அந்த இராமபத்திராம்பாள் இயற்றியது இரகுநாதப்யூதயம் என்னும் காவியம்அந்தவடமொழிகாவியத்தில் "செவ்வப்ப நாயகமன்னர் தன்கீர்த்தியாகிய நடனக்காரன் நடனம்ஆடுவதற்கென அமைத்த அரங்குபோல திருமுதுகுன்ற தேவர்க்குக் கோபுரம் வகுத்துள்ளார்." என்று இக்கோபுரத் திருப்பணி சிறப்பித்துக்கூறப்படுவதால் தெரிய வருகின்றது. இதுபற்றி வேறுகல்வெட்டு ஒன்றும்காணக்கிடைத்திலது. இருபத்தெட்டு ஆகமக்கோயிலில்தெலுங்குக்கல்வெட்டு ஒன்றுஉளது. அதில் முத்துகிருஷ்ணப்பநாயகர் என்பவர் சகாப்தம் 1524-ல் (கி.பி 1602ல்) திருமுதுகுன்றத் தேவர்க்கு பஞ்சவர்ணப்பிரகாரம் கட்டிவைத்ததாகக் கூறப்படுகிறது. அது இப்பொழுதுள்ள புறமதிலுக்குவெளியே இருந்து, கி.பி.18-ம் நூற்றாண்டில் முகமதியர் ஆட்சியிலே அழிந்துபோனதாகத் தெரிகிறது. முகமதியரும் பிரெஞ்சுக்காரரும் கூடி இக்கோயிலை கோட்டையாக்கி வைத்திருந்தனர் அக்காலத்தே (கி.பி. 18-ஆம்

நூற்றாண்டின் தொடக்கத்தில்) அகழிவெட்டி அரண் செய்வதற்காகஅப்பஞ்சவர்ணப்பிரகாரத்தை இடித்து இருந்தஇடம்தெரியாதபடி செய்துவிட்டனர். பின்னர் கி.பி. 1760ல் இக்கோட்டை ஆங்கிலேயர் வசமா யிற்று. அதன்பிறகே கி.பி. 1803ல் கார்ரோ என்னும் பெயருடைய ஆங்கிலேயர் (ஜில்லா கலைக்டர்) அகழி யைத் தூர்த்து அரண்களை அழித்துக் கோட்டையை மீண்டும் கோயிலாக்கி வைத்தனர்.

கி.பி. 1813 முதல் 1926 வரை தென்னாற்காடு ஜில்லா கலைக்டராக சார்லஸ் ஹைட் துரை என்பவர் இருந்துளார். அவர் இக்கோயிலுள்ள கைலாசப் பிர காரத்திற்கு தளவரிசை போட்டு ஹைட் தளவரிசை என்று தன்பெயரை இட்டுள்ளார். தேரிழுக்கஇருப்புச் சங்கிலியும், கும்ப ஆராத்தி செய்ய வெள்ளிக் குடமும் செய்துவைத்துள்ளார். அவர், உள்ளன்போடு இப்பழ மலைநாதருக்குப் பற்பலவகையில் தொண்டு செய்து இன்புற்றிருந்தார். சான்று, தென்னாற்காடு ஜில்லா ஆங்கில வரலாற்றால் (Gazetteer) அறியக்கிடக்கின் றது.கீழைக்கோபுர வாயிலுக்கு முன்னாலுள்ள பதி னாறுகால்மண்டபத்தைக் கர்னத்தம் சுப்பராயசெட்டி யார் என்பவர் சுமார்ஐம்பது ஆண்டுகளுக்குமுன்கட்டி யுள்ளார். மதுரைஜில்லா அமராவதி புதூர் வயி.நா.க. ராம.அ. செட்டியார் வகையரா சுமார் ஐம்பதுஆண்டு களுக்கு முன் இக் கோயிலில் திருப்பணி செய்யத் தொடங்கினர். அத்திருப்பணி மூன்றாண்டினுள்முடிவு பெற்றுக் கி.பி. 1893ல் கும்பாபிடேகம் செய்துள்ளார் பின்னர், அமராவதிபுதூர் வெங்கடாசலம் செட்டியார் இந்தக்கோவிலுக்கு அநேக ஆண்டுகள் தர்மகர்த்தா வாக இருந்தபோது பலநாட்டுக்கோட்டைசெட்டியார்

களிடம் பொருள்வசூல்செய்து, இரண்டு மூன்று லக்ஷ ரூபாய்மதிப்பிடும்படியான திருப்பணிகள்செய்துமுடித்தார். அவர் செய்த திருப்பணியின் விவரம் கீழ்க் கண்டவாறு .

புறமதிலிலுள்ள கீழைக்கோபுரம், தெற்குக்கோபுரம் இரண்டினுள்ளும் பழுதுபட்டிருந்த சித்திரங்களை புதுப்பித்து வர்ணந்தீட்டியுள்ளனர். மேற்குக்கோபுரம் வடக்குக்கோபுரம் இரண்டிற்கும் வர்ணம்மட்டும் தீட்டினர் ஆழத்துப்பிள்ளையார் கோவிலைப்புதுப்பித்துக் கட்டினர். உள்மடப்பளிக்கு மேற்புறச் சுவரை மட்டும் புதுப்பித்து உள்ளேதளவரிசை இட்டனர். வன்னிமரத்திற்கு மேடையும் அதற்குமண்டபமும் கட்டினர். இருபத்தெட்டு ஆகமக்கோயிலைப் பிரித்துத் தனியேகட்டி இலிங்கங்களை வரிசைப்படுத்தி அமைத்தனர். வன்னியடிப்பிரகாரம் அறுபத்துமூவர் பிரகாரம் இரண்டிற்கும் தளவரிசைஇட்டனர். அறுபத்துமூவர்மேடை கட்டினர். மற்றக் கட்டிடங்களிலும் மதில்களிலும் பழுதடைந்தவற்றைச் சீர்படுத்தினர். மதில்களில்இடபங்கள் அமைத்தனர். விமானங்களுக்கெல்லாம் தங்கக் கலசங்களைப் புதுப்பித்துஅமைத்தனர். இந்தஅளவே நகரத்தார்செய்த திருப்பணிகளாம். பின்னர் கி.பி. 1910ல்கும்பாபிடேகமும் நடத்திவைத்தனர். திருமணிமுத்தாற்றில் உள்ள கருங்கல் படித்துறை முழுவதும், சென்னை வணிகர் ஆயிரவர் நகரத்தார் தியாகம் வேங்கடசெட்டியார் தம்பி காளத்தி செட்டியார் என்பவரால் கி.பி. 1714ல் கட்டப்பட்டது. சான்று, அப்படித் துறையிலுள்ள கல்வெட்டு.

மின்சார விளக்குத் திருப்பணி: 1940, 41-வது ஆண்டுகளில் இக்கோயிலுக்கு மின்சார விளக்குகள்

போடப்பட்டன சுமார் 150 விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. தேவஸ்தான அதிகாரிகள் தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ளபலஊர்களுக்குச்சென்று விளக்கு தர்மம்வசூல்செய்து ஷி தொகையைக்கொண்டு இவ் விளக்குகள்போடப்பட்டு, 1941ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8ஆம்நாள்மாலை, சென்னை ஹிந்துமத பரிபாலன போர்டுகமிஷனர், ராவ்பகதூர் C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் B.A., B.L., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**ஆராய்ச்சி வரலாறு:** இக்கோயிலினின்று அரசியலாரால் எடுத்துவெளிவந்துள்ள கல்வெட்டு72. வெளிவராதுபடிக்க விளங்குவன2,ஆக 74 அவற்றுள்கண்டராதித்த சோழன் காலத்தது 1. முதல் இராஜராஜ சோழன் காலத்தன9. முதல் இராஜேந்திரசோழன் காலத்தன 4. இராஜாதிராஜ தேவன் காலத்தன 2. விக்கிரமசோழன் காலத்தன 2. இரண்டாம் ராஜராஜ சோழன் காலத்தது1. மூன்றாம்குலோத்துங்கசோழன் காலத்தன 3. ஆகசோழமன்னர் காலத்தவை 22. காடவ மன்னரான வீரசேகர காடவராயன் காலத்தன 2. பல்லவமன்னன் கோப்பெருஞ்சிங்கன் காலத்தன 13. பாண்டியமன்னர் காலத்தன 16. (அவற்றுள் விக்கிரமபாண்டியன் காலத்தன 3. வீரபாண்டியன் காலத்தது1. சுந்தரபாண்டியன்காலத்தன 3. மாவர்மபாண்டியன் காலத்தது 1. கோனேரின்மைகொண்டான் காலத்தது 8. ஆக 16.) விஜயநகர மன்னர் காலத்தவை 13. (அவற்றுள் கம்பண உடையார் காலத்தது 1. பொக்கண உடையார் காலத்தன 9. 2-ஆம் பிரதாப தேவராயர் காலத்தன3. ஆக 13) நாயக மன்னர்கள் காலத்தன 2. (அவற்றுள் முத்து

கிருஷ்ணப்பநாயகர்காலத்தது1.வையப்ப கிருஷ்ணம நாயகர் காலத்தது 1. ஆக 2) இன்னார் காலத்தன என்றுவிளங்காதவை5. தியாகம் காளத்திசெட்டியார் கல்வெட்டு 1. ஆக 74.

அவற்றுள், மறையோத, புராணம்படிக்க,தேவா ரத் திருப்பதிகம் பாட ஏற்பட்டுள்ள கல்வெட்டு 5. கோயில்பூசைக்கு நிலம்விட்டதாக17. திருவிளக்கிட்ட தாக 24. திருவாபரணம் செய்து வைத்ததாக 4. கோயில்திருப்பணி செய்ததாக 6. நந்தவனம் வைத்த தாக 2. நட்டுவனுக்கு நெல் கொடுத்ததாக 1. பரிச் சாரகனுக்கு ஆடை கொடுத்ததாக 1. நிலம் பரிவர்த் தனை செய்ததாக 1. அரசர்பெயரால் விழா நடத்திய தாக 4. வாங்கியகடனைக் கொடுக்கமுடியாத ஒரு வனுக்கு நெய்விளக்குப்போடுமாறு தண்டனையிட் டது1. ஆக 66 கல்வெட்டுகள் இக்கோயிலுக்குத் தொடர்புடையன. கைக்கோளருக்கும் வணிகருக்கும் வரிதள்ளுபடி செய்ததாக 2. வரிவசூல் தானியமாக வும் வசூலிக்க உத்தரவு1. அரசர் வெற்றியைக் கூறு வது1. வலங்கை இடங்கையாரின் ஒப்பந்தம்1. விளங் காதன 3. ஆக 8 கல்வெட்டுக்கள் பிற வகையில் உள்ளன.

கல்வெட்டுக்களில் காணக்கிடக்கும் அரசர்களின் பெயர்கள் :

பராந்தகசோழன், கண்டராதித்தசோழன், அவன் மனைவி செம்பியன்மாதேவி, உத்தம சோழன், இராஜராஜ சோழன், இராஜேந்திரசோழன், இராஜாதிராஜ சோழன், விக்கிரம சோழன், 2-ஆம் இராஜராஜ சோழன், 3-ஆம் குலோத்துங்க சோழன், ஏழிசைமோகனான குலோத்துங்கசோழ காடவராதித் தன், வீரசேகர காடவராயன், அரச நாராயணன் கச்சிராயன்,

கோப்பெருஞ்சிங்கன், கச்சிராயன் எனும் அரசநாராயணன் ஏழிசை மோகன், விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், மாவர்ம பாண்டியன், கோனேரின்மை கொண்டான், அரியண்ண உடையார், பொக்கண உடையார், கம்பண உடையார், வீரவிஜயராயர், முப்பிடி கிருஷ்ணபதி முதலியவையாம்.

சில குறிப்புகள்: இராஜராஜன் கல்வெட்டில் மற்றவெளியூர் கல் வெட்டுக்களில் புகழ்ந்துகொள்வது போலவே தன் வெற்றிகளைக் கூறிக்கொள்கிறான். அதனைப் பின்னால் வரும் அவன் கல்வெட்டில் காண்க. வீரசேகரக்காடவராயன் என்பவன் சகாப்தம் 1108ல் (கி.பி. 1186ல்) அதியமான் நாட்டையும், கற்கடகமாநாயனாற்குச் சொந்தமான கூடலையும் அழித்ததாகக் கூறிக்கொள்கிறான். இக்கல்வெட்டு தமிழில் செய்யுளாக உள்ளது. (1918/74) தேவன் பல்லவராயன் என்பவன், பாண்டிய மண்டலத்து முட்டூர் கூற்றம் ஆதன்காரி மங்கலத்தை முற்றுகை இட்டதாகக்கூறிக்கொள்ளுகிறான். (1918/76) பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் என்பவன், தான் போர்க்களத்தில் பலரைக்கொன்றபழி நீங்குவதற்காகப் பழமலை நாதருக்கு வைரமுடி செய்துவைத்துள்ளான். அதற்கு அவனி ஆளப்பிறந்தான் என்றபெயரும் இட்டுள்ளான். (1918/73)சுந்தரபாண்டியன் காலத்தில் விக்கிரமசிம்மபட்டின அரசன் முப்பிடி கிருஷ்ணபதியின் கல்வெட்டு ஒன்று வடமொழியில் உளது. அதில் காகடிய பிரதாபருத்திர தேவர் எழுத்து என்று கையெழுத்திட்டவர் பெயரும்கூறப்படுகிறது. (1918/72,1918/83வது) கல்வெட்டில், கீழாமூர் நாட்டு திருமுனைப்பாடி கோப்பெருஞ்சிங்கன் கூடல் ஆளப்பிறந்தான்என்று கூறப்படுவதால், பல்லவமன்னனான கோப்பெருஞ்சிங்கன் என்பவன் திருமுனைப்பாடியில் இருந்தவன் என்று தெரிகிறது. சைவசமயத்தைப் பரவச்செய்தற்குரிய சிறந்தவழிகளான மறையோதல், புராணம் படித்தல், தேவாரப்பண் பாடல் என்ற கொள்கையை ஒவ்வொரு கோயில்களிலும் கையாண்டுவரின் சிறந்த முறையில் பயன்தரும். இந்தமுறையை, இக்கோயிலில் இராஜராஜ

சோழன் காலம் முதல் கோனேரின்மைகொண்டான் காலம் வரையில் கையாண்டுவந்திருக்கின்றனர் என்று தெரிகிறது (1918/40-44-50-75, 1900/132) கல்வெட்டுகளால் அறியலாம்

சில கல்வெட்டுக்கள் : ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் பொலிய பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமைபூண்டமை மனக்கொள காந்தளூர்ச்சாலை கலகறுத்தருளி வெங்கைநாடுங் கங்கைபாடியும் நுளம்பாடியும் தடிகபாடியும் குடமலைநாடும் தண்டாற் கொண்டு தன்னெழில் வளரூழிரு ளெல்லா யாண்டிலும் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் கோவிராஜ கேசரி பன்மர்க்கு யாண்டுகருதுவது இருங்கொளப்பாடி நெற்குப்பைத் திருமுதுகுன்றமுடைய மகாதேவர்க்கு உடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மலையபெருமானடிகள் மகளார் ஸ்ரீ உத்தமசோழர் தங்களாச்சி செம்பியன்மாமகா தேவியார் கொடுத்த ஸ்ரீமுடி ஒன்றுக்கு.........பொன் ஒன்பதின் கழஞ்சு ஒன்பது மஞ்சாடியும் எழுமாவும் இதனுக்கு உள்கூட்டு வெள்ளி இருநூற்று கழஞ்சரையே நாலு மஞ்சாடியும் முடியிலழுத்தின. மாணிக்க மூன்றும் சுழலக்கட்டின வயிரம் முப்பத்தாறு ஸ்ரீமுடியில் சுழலக்கோத்த முத்து ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றெட்டு இவை.........(191848).

ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னிவளர இருநிலமடந்தையும் போர் செயப் பரவையும் சீர்த்தனிச்செல்வியும் தன் பெருந்தேவியராகிய இன்புற நெடுதுறையூழியுள் இடைதுறை நாடும் துடர்வன வேலிப் படர்வனவாசியும் கள்ளிசூழ்மதில் கொள்ளிப் பாக்கமும் நண்ணர் கருமுரண் மண்ணைக் கடக்கமும் மாப்பெருந் தண்டாற்கொண்ட கோப்பரகேசரி பன்பரான ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு 4-வதுவடகரை ராஜேந்திரசிம்ம வளநாட்டு இருங்கொள்ளிப்பாடி பழுவூர் கூற்றத்து நெற்குப்பையூரோம் திருமுதுகுன்றுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய......நஞ்செய் நிலம்.

இந்த இரு கல்வெட்டுக்களினின்றும் இத்திருமுதுகுன் றிற்கு நெற்குப்பை என்றும் பெயர் வழங்கவந்ததாகத் தெரிகிறது.

பிரம்மோற்சவம்: பிரம்மோற்சவத்தையே மகோற்சவம் என்று கூறுவர். பிரம்மம் மஹத்என்னும் சொற்கள் பெரியது என்னும் பொருளைத் தருவன வாம். உற்சவம் என்பது படைப்பு ஒழியைக் குறிப் பது எனவும், இன்பத்தை உண்டுபண்ணுவது என வும், கடவுள் கோயிலினின்று வெளிவருதல் எனவும், மக்களை நல்வழியில் ஏவுகின்றது எனவும் பொருள் படும். ஆதலால், இறைவன் மக்களை நல்வழியில் ஏவுவதற்காக கோயிலினின்றும் காட்சிதரும் பெரிய திருவிழாவிற்குப் 'பிரம்மோற்சவம் அல்லது மகோற்சவம் என்று பெயர் கூறுவர்.

இத்திருமுதுகுன்றில் இரண்டு பெரிய விழாக் கள் நடைபெறுகின்றன. ஒன்று ஆடித்திங்கள் பூர ஓரையில் நடைபெறும் திருக்கல்யாண விழா. மற் றொன்று மாசித்திங்களில் நடைறெறும் மகோற்சவ விழா. இவற்றுள் திருக்கல்யாண விழா என்பது சிவ பெறுமான் தனது அருட்சக்தியோடு கூடியிருந்தே எச்செயல்களையும் நடத்திவருகின்றார். தனித் திருந்து நடத்துகின்றாரில்லை. சிவமும் சக்தியும், தீயும் வெம்மையும்போல, நீரும் தன்மையும்போல என்றும் ஒன்றாக உளது என்ற உண்மையை மக்கள் அறிந்துகொள்வதற்காக நடக்கும் விழாவாம். மாசித் திங்கள் மகோற்சவ விழா, படைத்தல், காத்தல், அழித்தல் (ஒடுக்கல்), அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிற்கும் தலைவராக உள்ளவர் சிவபெரு

மான் என்னும் உண்மையை மக்கள் அறிந்து இன் புறுவதற்காக நடக்கும் விழாவாம்.

இவ்வூரில் நடக்கும் மாசி மகோற்சவத்திற்கு முன்னால், முதலில் ஐயனாருக்கு ஒருநாளும், காளியம்மன் என்னும் செல்விக்கு எட்டுநாளும், பிள்ளையாருக்குப் பத்துநாளும் முறையே விழாக்கள் நடைபெறும். அதன்பின்னரே பழமலைநாதர் கோயிலில் விழா ஆரம்பமாகும். முதல்நாள் கொடியேற்று விழா நடைபெறும். அது படைத்தல் தொழிலைக்குறிக்கும் விழா. இரண்டாம் நாள் முதல் எட்டாம் நாள் வரையில் நடக்கும் ஏழுநாளைய விழாக்களும் காத்தற்றொழிலைக் குறிப்பன. இதில் 6-ஆம் திருநாள் சிறப்புடையது. அன்று ஒரேநாள் பழமலைநாதர் வெள்ளி இடப வாகனத்தில் நேர்முகமாக அமர்ந்து வீதியில் எழுந்தருளி திருவுலாக்காட்சி தந்தருளுவார். ஒன்பதாம் நாள் தேர்விழா நடைபெறும். அது சம்ஹாரத் தொழிலைக் குறிக்கும் விழா. பத்தாம்நாள் தீர்த்த வாரி விழா நடைபெறும். அது அருள்புரியும் (அனுக்கிரகம் செய்யும்) தொழிலைக்குறிக்கும் விழா. அன்று இரவு கொடி இறக்கும்விழா நடைபெறும். அதனை மௌனோற்சவம் என்பர். அது மறைதல் (திரோபவம்) என்னும் தொழிலைக் குறிக்கும் விழா. பதினோராம்நாள் இரவு தெப்போற்சவம் நடைபெறும். அதாவது திருமணிமுத்தாற்றின் கீழ்பாலுள்ள அம்மைகுளம் என்னும் திருக்குளத்தில் முருகக் கடவுள், தெய்வானை வள்ளியம்மையுடன் எழுந்தருளிக் காட்சி தருவர். முடிவாகப் பன்னிரண்டாம் நாள் சண்டேசுரர் விழா நடைபெறும். இரவு மக்களுக்குச்

சிவதரிசனப் பயனைக் கூட்டுவிக்கும் சண்டேசுரர் வீதியில் எழுந்தருளி வந்து காட்சிதருவர்.

நிர்வாகம் : இந்தத் தேவஸ்தானம் சென்னை அரசாங்க இந்துமத பரிபாலன இலாகாவின் பார்வைக்கு உட்பட்டது. 1954ஆம் ஆண்டில் இந்த தேவஸ்தானத்தின் நிர்வாகம் சீர்பெற நடைபெற வேண்டி ஒரு ஸ்கீம் மாற்றி வகுக்கப்பெற்றது. அத் திட்டத்தின்படி தற்போது ஐந்து தர்மகர்த்தர்களும் ஒரு நிர்வாக அதிகாரியும் அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனரால் நியமுகம் செய்யப்பட்டு, அவர்களால் திர்வகிக்கப்பட்டு வருகிறது.

## சுற்றுக் கோயில்கள்

சித்திவிநாயகர் கோயில்: இது வடக்குக் கோட்டைவீதிக்கு வடபால் திருமணிமுத்தாற்றின் தென்கரையில் உளது. மானியம் உண்டு.

கூத்தாடும் பிள்ளையார் கோயில்: இது ஊருக்குத் தென் கீழ்க் கோடியில் பெண்ணாகடம் போகும் பாதைக்கு மேல்புறம் உளது. இதற்கு சுமார் ஏழு ஏக்கர் நஞ்செய் புன்செய் நிலம் உண்டு. உள்ளூர் படையாச்சியார் ஒருவர் மேற்பார்வையில் பூசை நடந்து வருகிறது.

ஐயனார் கோயில்: இந்த ஐயனார் கோயில் வீதியின் கீழ்க்கோடியில் மேற்குமுகமாக உளது. சுமார் மூன்று ஏக்கர் நிலம் உண்டு. ஒரு சைவர் மேற்பார்வையில் பூசை நடந்து வருகிறது.

காளியம்மன் என்னும் செல்வி: இது இரட்டை பார்ப்பனர் வீதிக்குக் கீழ்பால் திருமணிமுத்தாற்றின் கீழ்கரையில் உளது. இதற்கு சுமார் நான்கு ஏக்கர் நிலமுண்டு. ஒரு படை யாச்சியார் மேற்பார்வையில் பூசை நடைபெற்றுவருகிறது.

பெருமாள் கோயில்: இது ஊருக்குத் தென் புறம் சாத்துக்குடலுக்கு போகும் பாதைக்குத் தென் பால் உளது. இதற்கு சுமார் ஒரு ஏக்கர் நிலம் உண்டு. உள்ளூரிலுள்ள சில நாயுடுமார்களுடைய

வும், முதலிமார்களுடையவும் ஆதரவினால் பூசை நடந்து வருகிறது.

**துரோபதையம்மன் கோயில் :** இது மேற்கூறிய பெருமாள் கோயிலுக்கு அண்மையில் வடபுறம் உளது. உள்ளூர் பொதுமக்கள் ஆதரவில் பூசை நடந்துவருகிறது.

**கிழக்குத் துரோபதையம்மன் கோயில் :** இது ஊருக்கு கீழ்க்கோடியிலுள்ள கூத்தாடும்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வடபுறம் உளது. வன்னியர்கள் ஆதரவில் பூசை நடந்து வருகிறது.

**மாரியம்மன் கோயில் :** இது திருமணிமுத்தாற்றின் கீழ்பாலுள்ள அம்மைகுளத்திற்கு வடபாலுளது. ஒரு படையாச்சியாரின் மேற்பார்வையில் பூசை நடந்துவருகிறது.

**முருகன் கோயில்கள் :** ஒன்று ஊருக்குத் தென்பால் சுமார்ஒன்றரைக்கல் தொலைவில் உளது. அதற்கு வேடப்பார் கோயில் என்று பெயர். வேடப்பார் கலியுகத்தில் மக்களுக்கு கண்கண்ட தெய்வமாக விளங்குகின்றார். வெள்ளிக்கிழமைதோறும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து தரிசித்துப் போகின்றனர். அதற்குச் சுமார் மூன்று ஏக்கர் நிலம் உண்டு. பூதாம்பூர் படையாச்சியார் ஒருவர் மேற்பார்வையில் பூசை நடைபெற்று வருகின்றது. இரண்டாவது, ஊருக்கு மேற்கில் சுமார் ஒன்றரை கல் தொலைவில் உளது. அதற்குக் கொளஞ்சியப்பர் கோயில் என்று பெயர். கொளஞ்சியப்பர் மக்களுக்குத் தீராப்பிணிகளையும்

தீர்த்து நலம் தருகின்றார். சென்னை அரசாங்க அறநிலைய இலாகாவின் மேற்பார்வையில் பூசை நடைபெற்று வருகின்றது. மூன்றாவது, ஊருக்கு வடபால் சுமார் ஒருகல் தொலைவில் உளது. அதற்கு வெண்மலையப்பர் கோயில் என்று பெயர். வெண்மலையப்பர் உழவர்களுக்கு காவல் தெய்வமாக இருந்து நலம் தருகின்றார். ஒரு படையாச்சியார் மேற்பார்வையில் பூசை நடந்து வருகின்றது. நான்காவது ஊருக்குக் கீழ்பால் சுமார் இரண்டரை கல் தொலைவில் உளது. அதற்குக் கரும்பாயிரங்கொண்ட அப்பர் கோயில் என்று பெயர். கரும்பாயிரங்கொண்ட அப்பர் மக்கள் விரும்பிய பயனைத் தந்து விளங்குகின்றார். அவருக்கு ஒரு படையாச்சியார் பூசை நடத்தி வருகின்றார்.

## நூல்கள்

1 தேவாரம் — சம்பந்தர் பதிகம் 7 (7-ஆம் நூற்றாண்டு)
— அப்பர் ,, 1 (7-ஆம் ,, )
— சுந்தரர் ,, 3 (9-ஆம் ,, )

2 திருப்புகழ் — அருணகிரியார் பாடல் 1 (15ஆம் ,, )

3 திருமுதுகுன்றத் தல புராணம்
— ஞானக்கூத்தர் (16-ஆம் ,, )

4 பெரியநாயகி அம்மன் பதிகம்
— குமார தேவர் (16-ஆம் ,, )

5 க்ஷேத்திரக் கோவை
— குரு நமசிவாய அடிகள் (16-ஆம் ,, )

6 பழமலையந்தாதி

7 பெரியநாயகியம்மை விருத்தம்

8 பெரியநாயகியம்மை
கட்டளைக் கலித்துறை

9 பிக்ஷாடண நவமணிமாலை

(6–9: சிவப்பிரகாச அடிகள் (16ஆம் நூ.))

10 குரு தரிசனப் பதிகம்
—இராமலிங்க அடிகள் (19ஆம் நூ.)

11 பெரியநாயகியம்மை பிள்ளைத் தமிழ்
—சொக்கலிங்க அடிகள் (19ஆம் நூ.)

உ
சிவமயம்

# திருமுதுகுன்றத் திருமுறை

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

பண்-நட்டபாடை] [முதல் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மத்தாவரைநி றுவிக்கடல் கடைந்தவ்விடமுண்ட
தொத்தார் தருமணிநீண்முடிச்சுடர்வண்ணன திடமாங்
கொத்தார்மலர்குளிர் சத்தகிலொளிர் குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ் தருமுதுகுன் றடைவோமே. (1)

தழையார்வடவியர்வீ தனிற்றவமேபுரிசைவ
னிழையாரிடைமடவாளொடுமினிதாவுரைவிடமா
மழைவானிடை முழவவ்வெழில்வளைவாளுகிரெரிகண்
முழைவாளரிகுமிறும்முயர்முதுகுன் றடைவோமே. (2)

விளையாததொர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டளையாயின தவிரவ்வருடலைவன்னதுசார்பாங்
களையார் தருகதிராயிரமுடையவ்வவனொடு
முளைமாமதி தவழும்முயர்முதுகுன் றடைவோமே. (3)

சுரர்மா தவர்தொகுகின்னரரவரோதொலைவில்லா
நரரானபன்முனிவர்தொழவிருந்தானிடநலமா
ரரசார்வரவணிகெபாற்கலனவைகொண்டுபன்னாளு
முரசார்வருமணமொய்ம்புடைமுதுகுன் றடைவோமே. (4)

அறையார்கழலந்தன் றனையயின்மூவிலையழகார்
கறையார்நெடுவேலின்மிசையேற்றானிடங்கருதின்
மறையாயினபலசொல்லியொண்மலர்சாந்தவைகொண்டு
முறையான்மிகுமுனிவர்தொழுமுதுகுன் றடைவோமே. (5)

ஏவார்சிலையெயினன்னுருவாகியெழில்விசயற்
கோவாதவின்னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகிற்
சாவாதவர்பிறவா தவர் தவமேமிகவுடையார்
மூவா தபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (6)

தழல்சேர்தருதிருமேனியர்சசிசேர்சடைமுடியர்
மழமால்விடைமிகவேறியமறையோனுறைகோயில்
விழவோடொலிமிகுமங்கையர்தகுமாடகசாலை
முழவோடிசைநடமுன்செயுமுதுகுன்றடைவோமே. (7)

செதுவாய்மைகள்கருதிவ்வரையெடுத்ததிறலரக்கன்
கதுவாய்கள்பத்தலறியிடக்கண்டானுறைகோயில்
மதுவாயசெங்காந்தள்மலர்நிறையக்குறைவில்லா
முதுவேய்கண்முத்துதிரும்பொழில்முதுகுன்றடைவோமே. (8

இயலாடியபிரமன்னரியிருவர்க்கறிவரிய
செயலாடியதீயாருருவாகியெழுசெல்வன்
புயலாடுவண்பொழில்சூழ்புனர்படைப்பைத்தடத்தருகே
முயலோடவெண்கயல்பாய்தருமுதுகுன்றடைவோமே. (9)

அருகரொடுபுத்தரவரறியாவரன்மலையான்
மருகன்வருமிடபக்கொடியுடையானிடமலரார்
கருகுழன்மடவார்கடிகுறிஞ்சியதுபாடி
முருகன்னதுபெருமைபகர்முதுகுன்றடைவோமே (10)

முகில்சேர்தருமுதுகுன்றுடையானைம்மிகுதொல்சீர்ப்
புகலிந்நகர்மறைஞானசம்பந்தன்னுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர் பாவம்மடையாவே. (11)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகானீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே. (1)

பற்றுமாகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபா
ரெற்றுநீர்தீக்காலுமேலைவிண்ணியமானனோடு
மற்றுமாதோர்பல்லுயிராய்மாலயனும்மறைகண்
முற்றுமாகிவேறுமானான்மேயதுமுதுகுன்றே. (2)

வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
நாரிபாகநயந்துபூமேனான்முகன்றன்றலையிற்
சீரிதாகப்பலிகொள்செல்வன்செற்றலுந்தோன்றியதோர்
மூரிநாகத்துரிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே. (3)

பாடுவாருக்கருளுமெந்தைபனிமுதுபௌவமுந்நீர்
நீடுபாருமுழுதுமோடியண்டர்நிலைகெடலு
நாடுதானுமூடுமோடிஞாலமுநான்முகனு
மூடுகாணமூடுவெள்ளத்துயர்ந்ததுமுதுகுன்றே. (4)

வழங்குதிங்கள்வன்னிமத்தமாசுணமீசணவிச்
செழுங்கல்வேந்தன்செல்விகாணத்தேவர்திசைவணங்கத்
தழங்குமொந்தைதக்கைமிக்கபேயக்கணப்பூதஞ்சூழ
முழங்குசெந்தீயேந்தியாடிமேயதுகுன்றே. (5)

சுழிந்தகங்கைதோய்ந்ததிங்கட்டொல்லராநல்லிதழி
கழிந்தசென்னிச்சைவவேடந்தானினைத்தைம்புலனு
மழிந்தசிந்தையந்தணாளர்க்கறம்பொருளின்பம்வீடு
மொழிந்தவாயான்முக்கணாதிமேயதுமுதுகுன்றே. (6)

மயங்குமாயம்வல்லராகிவானினொடுநீரு
மியங்குவோருக்கிறைவனாயவிராவணன்றோணெரித்த
புயங்கராகமா நடத்தன்புணர்முலைமாதுமையாண்
முயங்குமார்பன்முனிவரேத்தமேயதுமுதுகுன்றே. (7)

ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனுமறியாக்
கோலமண்டர்சிந்தைகொள்ளாராயினுங்கொய்மலரா
லேலவிண்டைகட்டிநாமமிசையவெப்போதுமேத்து
முலமுண்ட நீற்றர்வாயான்மேயதுகுன்றே. (8)

உறிகொள்கையர்சீவரத்தருண்டுழன்மிண்டர்சொல்லை
நெறிகளென்ன நினைவுறாதேநித்தலுங்கை தொழுமின்
மறிகொள்கையன்வங்கமுந்நீர்ப்பொங்குவிடத்தையுண்ட
மறிகொண்மேனிமங்கைபங்கன்மேயதுமுதுகுன்றே. (9)

மொய்த்துவானோர்சல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையென்னும்பிரமபுரத்தலைவன்.

திருச்சிற்றம்பலம்

---

## திருவிருக்குக்குறள்

பண்-குறிஞ்சி] [முதல் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நின்றுமலர்தூவி
யின்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க்
கென்றுமின்பமே. (1)

அத்தன்முதுகுன்றைப்
பத்தியாகிநீர்
நித்தமேத்துவீர்க்
குய்த்தல்செல்வமே. (2)

ஐயன்முதுகுன்றைப்
பொய்கள்கெடநின்று
கைகள் கூப்புவீர்
வையமுமதாமே. (3)

ஈசன்முதுகுன்றை
நேசமாகிநீர்
வாசமலர்தூவப்
பாசவினைபோமே. (4)

மணியார்முதுகுன்றைப்
பணிவாரவர்கண்டீர்
பிணியாயினகெட்டுத்
தணிவாருலகிலே. (5)

மொய்யார்முதுகுன்றி
லையாவெனவல்லார்
பொய்யாரிரவோர்க்குச்
செய்யாளணியாளே. (6)

விடையான்முதுகுன்றை
யிடையாதேத்துவார்
புடையாயினசூழ
வுடையாருலகமே. (7)

பத்துத்தலையானைக்
கத்தவிரலூன்று
மத்தன்முதுகுன்றை
மொய்த்துப்பணிமினே (8)

இருவரறியாத
வொருவன்முதுகுன்றை
யுலகிநினைவார்கள்
பெருகிநிகழ்வோரே. (9)

தோரணமணருஞ்
சேரும்வகையில்லா
னேரின்முதுகுன்றை
நீர்நின்றுள்குமே. (10)

நின்றுமுதுகுன்றை
நன்றுசம்பந்த
னொன்றுமுரைவல்லா
ரென்றுமுயர்வோரே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

மெய்த்தாறுசுவையுமேழிசையுமெண்குணங்களும்விரும்பு
நால்வே
தத்தாலுமறிவொண்ணாநடைதெளியப்பளிங்கே
போலறிவைபாக
மொத்தாறுசமயங்கட்கொருதலைவன்கருதுமூருலவு
தெண்ணீர்
முத்தாறுவெதிருதிரநித்திலம்வாரிக்கொழிக்கு
முதுகுன்றமே. (1)

வேரிமிகுகுழலியொடுவேடுவனாய்வெங்கானில்விசயன்மேவு
போரின்மிகுபொறையளந்துபாசுபதம்புரிந்தளித்த
புராணர்கோயில்
காரின்மலிகடிபொழில்கள்கனிகள்பலமலருதிர்த்துக்கய
முயங்கி
மூரிவளங்கிளர்தென்றறிருமுன்றிற்புகுந்துலவு
முதுகுன்றமே. (2)

தக்கனதுபெருவேள்விச்சந்திரனெச்சனருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே தண்டித்தவிமலர்
கோயில்
கொக்கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்
குவைகொள்சோலை
முக்கனியின்சாறொழிகிச்சேறுலராநீள்வயல்சூழ்
முதுகுன்றமே. (3)

வெம்மைமிகுபுராவணர்மிகைசெய்யவிறழிந்துவிண்ணு
ளோர்கள்
செம்மலரோனிந்திரன் மால்சென்றிரப்பத் தேவர்களே
தேரதாக
மைம்மருவுமேருவிலுமாசுணநாணரியெரிகால்வாளியாக
மும்மதிலுநொடியளவிற்பொடிசெய்தமுதல்வனிட
முதுகுன்றமே. (4)

இழைமேவுகலையல்குலேந்திழையாளொருபாலாயொருபா
லெள்கா
துழைமேவுமுரியுடுத்தவொருவனிருப்பிடமென்பரும்ப
ரோங்கு
கழைமேவுமடமந்திமழைகண்டு மகவினொடுபுகவொண்
கல்லின்
முழைமேவுமாவானையிரைதேரும்வளர்சாரன்
முதுகுன்றமே. (5)

நகையார்வெண்டலைமாலைமுடிக்கணிந்தநாதனிட
நன்முத்தாறு
வகையாரும்வரைப்பண்டங்கொண்டிரண்டுகரை
யருகுமறியமோதித்
தகையாரும்வரம்பிடறிச்சாலிகழுநீர்குவளைசாயப்பாய்ந்து
முகையார் செந்தாமரைகண்முகமலரவயறழுவு
முதுகுன்றமே. (6)

அறங்கிளருநால்வேதமாலின்கீழிருந்தருளியமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரையோன்சிரமைந்தினொன்றறுத்த
நிமலர்கோயி
நிறங்கொண்மணித்தரளங்கள்வரத்திண்டங்கெழிற்
குரவர்சிறுமிமார்கண்
முறங்களினார்கொழித்துமணிசெலவிலக்கிமுத்துலைப்பெய்
முதுகுன்றமே. (7)

கதிரொளியநெடுமுடிபத்துடையகடலிங்கையர்கோன்கண்
ணும்வாயும்
பிதிரொளியகனல்பிரங்கப்பெருங்கயிலைமலையைநிலை
பெயர்த்தஞான்று
மதிலளகைக்கிறைமுரலமலரடி யொன்றூன்றிமறைபாட
வாங்கே
முதிரொளியசுடர்நெடுவாண்முன்னீந்தான்வாய்ந்தபதி
முதுகுன்றமே. (8)

பூவார்பொற்றவிசின்மிசையிருந்தவனும்பூந்துழாய்
புனைந்தமாலு
மோவாதுகழுகேனமா யுயர்ந்ததாழ்ந்துற நாடியுண்மை
காணாத்

தேவாருந்திருவுருவன்சேருமலைசெழுநிலத்தைமூடவந்த
மூவாதமுழங்கொலிநீர்கீழ்தாழமேலுயர்ந்த
முதுகுன்றமே. (9)

மேனியிற்சீவரத்தாரும்விரிதருதட்டுடையாரும்விரவலாகா
வூனிகளாயுள்ளார்சொற்கொள்ளாதுமுள்ளுணர்ந்
தங்குய்ம்மின்றொண்டீர்
ஞானிகளாயுள்ளார்கணான்மறையைமுழுதுணர்ந்தைம்
புலன்கள்செற்று
மோனிகளாய்முனிச்செல்வர்தனித்திருந்துதவம்புரிய
முதுகுன்றமே. (10)

முழங்கொலிநீர் முத்தாறுவலஞ்செய்யும்முதுகுன்றத்
திறையைமூவாப்
பழங்கிழமைப்பன்னிருபேர்படைத்துடையகழுமலமே
பதியாக்கொண்டு
தழங்கெரிமூன்றோம்புதொழிற்றமிழ்ஞானசம்பந்தன்
சமைத்தபாடல்
வழங்குமிசைகூடும்வகைபாடுமவர்நீடுலகமாள்வர்தாமே.
(11)

திருச்சிற்றம்பலம்

---

பண்-காந்தாரம்] [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தேவாசிறியோம் பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
யாவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வா
யோவாவுவரிகொள்ளவுயர்ந்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றே. (1)

எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோயிலாகத்திகழவானை
மந்தியேறியினமாய்மலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயின்முதுகுன்றே. (2)

நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரத்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினியலைகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிறோய்கோயின்முதுகுன்றே (3)

தெரிந்தவடியார்சிவனேயென்றுதிசைதோறுங்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேந்தி
யிருந்துநின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றே. (4)

வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தஞ்
சித்தநைந்துசிவனேயென்பார்சிந்தையார்
தொத்தார்சந்துங்குரவும்வாரிக்கொணர்ந்துந்து
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (5)

வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னநல்கும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைடுவித்தெங்கு
மொய்ம்பார்சோலைவண்டுபாடுமுதுகுன்றே. (6, 7)

வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேந்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தவடியார்நின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. (8)

அல்லிமலர்மேலனுமரவினணையானுஞ்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லைவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்யுமுதுகுன்றே. (9)

கருகுமுடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
றுருகுசிந்தையில்லார்க்கயலானுறைகோயி
றிருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துநடஞ்செய்முதுகுன்றே. (10)

அறையார்கடல்சூழ்ந்தண்காழிச்சம்பந்தன்
முறையான்முனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றைக்
குறையாப்பபனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. (11)

திருச்சிற்றம்பலம்

---

பண்-கொல்லி] [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
வண்ணலாராயிழையாளொடுமமர்விடம்
விண்ணின்மாமழைபொழிந்தியவெள்ளருவிசேர்
திண்ணிலார்புறவணி திருமுதுகுன்றமே. (1)

வெறியுலாங்கொன்றையந்தாரினான்மேதரு
பொறியுலாமரவசைததாடியோர் புண்ணியன்
மறியுலாங்கையினான்மங்கையோடமர்விடஞ்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே (2)

ஏறினார்விடைமிசையிமையவர்தொழவுமை
கூறனார்கொல்புலித்தோலினார்மேனிமே
னீறனார்நிறைபுனற்சடையனார்நிகழ்விடட்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (3)

உரையினாருறுபொருளாயினுமையொடும்
விரையினார்கொன்றைசேர்சடையினான்மேவிட
முறையினாரொலியெனவோங்குமுத்தாறுமெய்த்
திரையினாரெறிபுனற்றிருமுதுகுன்றமே. (4)

கடியவாயினகுரற்களிறினைப்பிளிறவோ
சிடியவெங்குரலினொடாளிசென்றிடுநெறி
வடியவாய்மழுவினன்மங்கையோடமர்விடஞ்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே (5)

கானமார்கரியினீருரிவையார்பெரியதோர்
வானமார்மதியினோடரவர்தாமருவிட
மூனமாயினபிணியவைகெடுத்துமையொடுந்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (6)

மஞ்சர்தாமலர்கொடுவானவர்வணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பவே
யஞ்சொலரளுமையொடுமமர்விடமணிகலைச்
செஞ்சொலார்பயிறருந்திருமுதுகுன்றமே, (7)

காரினாரமர்தருங்கயிலைநன்மலையினை
யேரினார்முடியிராவணனெடுத்தானிற
வாரினார்முலையொடுமன்னினார்மருவிடஞ்
சீரினார்திகழ்தருந்திருமுதுகுன்றமே. (8)

ஆடினார்கானகத்தருமறையின்பொருள்
பாடினார்பலபுகழ்ப்பரமனாரிணையடி
யேடினார்மலர்மிசையயனுமாலிருவருந்
தேடினாரறிவொணார்திருமுதுகுன்றமே. (9)

மாசுமெய்தூசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசுமெய்யுளவலபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினமிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந்திருமுதுகுன்றமே. (10)

திண்ணினார் புறவணி திருமுதுகுன்றரை
நண்ணினான் காழியுண் ஞானசம்பந்தன்சொ
லெண்ணினானீரைந்துமாலையுமியலுமாப்
பண்ணினாற்பாடுவார்க்கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருமுக்கால்

பண்-சாதாரி] [3-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

முரசதிர்ந்தெழு தருமுன்குன்றமேவிய
பரசமர்படையுடையீரே
பரசமர்படை யுடையீருமைப்பரவுவா
ரரசர்களுலகிலாவாரே. (1)

மொய்குழலாளொடு முதுகுன்றமேவிய
பையரவம்மசைத்தீரே
பையரவம்மசைத்தீருமைப்பாடுவார்
நைவிலர் நாடொருநலமே. (2)

முழவமர் பொழிலணிமுதுகுன்றமேவிய
மழவிடையதுவுடையீரே
மழவிடையதுவுடையீருமைவாழ்த்துவார்
பழியொடு பகையிலர்தாமே. (3)

முருகமர்பொழிலணி முதுகுன்றமேவிய
வுருவமர்சடைமுடியீரே
யுருவமர்சடைமுடியீருமையோதுவார்
திருவொடுதேசினர்தாமே, (4,5,6,7)

முத்திதருமுயர்முதுகுன்றமேவிய
பத்துமுடியடர்த்தீரே
பத்துமுடியடர்த்தீருமைப்பாடுவார்
சித்தநல்லவ்வடியாரே (8)
முயன்றவரருள்பெருமுதுகுன்றமேவிய
றியன்றவரறிவரியீரே
றியன்றவரறிவரியீருமையேத்துவார்
பறன்றலைநிற்பவர்தாமே. (9)
மொட்டலர்பொழிலணி முதுகுன்றமேவிய
கட்டமண்டேரைக்காய்ந்தீரே
கட்டமண்டேரைக்காய்ந்தீருமைக்கருதுவார்
சிட்டர்கள் சீர்பெறுவாரே (10)
மூடியசோலைசூழ் முதுகுன்றத்தீசனை
நாடியஞானசம்பந்த
னாடியஞானசம்பந்தனசெந்தமிழ்
பாடியவவர்பழியிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசு நாயனார்

திருத்தாண்டகம்] [4-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கருமணியைக் கனகத்தின்குன்றொப்பானைக்
கருதுவார்க்காற்றவெளியான்றன்னைக்
குருமணியைக்கோளரவமாட்டுவானைக்
கொல்வேங்கைய தாளானைக்கோவணவன்றன்னை
யருமணியையடைந்தவர்கட்கமுதொப்பானை
யானஞ்சுமாடியைநானபயம்புக்கத்
திருமணியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (1)

காரொளிய கண்டத்தெங்கடவுடன்னை
    காபாலிகட்டங்கமேந்தினானைப்
பாரொளியைவிண்ணொளியைய பாதாளத்தானைப்
    பான்மதியஞ்சூடியோர் பண்பன்றன்னைப்
பேரொளியைப்பெண்பாகம் வைத்தான்றன்னைப்
    பேணாவார்தம்வினையைப் பேணிவாங்குஞ்
சீரொளியைத் திருமுதுகுன்றுடையான்றன்னைத்
    தீவினையேனறியாவேதிகைத்தவாறே. (2)

எத்திசையும்வானவர்கடொழநின்றானை
    யேறூர்ந்தபெம்மானையெம்மானென்று
பத்தனாய்ப்பணிந்தடியேன்றன்னைப் பன்னாட்
    பாமாலைபாடபயில்வித்தானை
முத்தினையென்மணியை மாணிக்கத்தை
    முனைத்தெழுந்த செம்பவளக் கொழுந்தொப்பானைச்
சிந்தனையென்றிரு முதுகுன்றுடையான்றன்னைத்
    தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (3)

ஊன்கருவினுண்ணின்றசோதியானை
    யுத்தமனைப்பத்தர்மனங்குடிகொண்டானைக்
கான்றிந்துகாண்டீபமேந்தினானைக்
    கார்மேகமிடற்றானைக்கனலைக்காற்றைத்
தான்றெறிந்தங்கடியேனையாளக்கொண்டு
    தன்னுடையதிருவடியென்றலைமேல்வைத்த
தீன்கரும்பைத் திருமுதுகுன்றுடையான்றன்னைத்
    தீவினை யேனறியாதேதிகைத்தவாறே. (4)

தக்கனதுபெருவேள்விதகர்த்தானாகித்
    தாமரையானான்முகனுந்தானேயாகி
மிக்கதொரு தீவளிநீராகாசமாய்
    மேலுலகுக்கப்பாலாயிப்பாலானை

யக்கினொடுமுத்தினையுமணிந்துதொண்டர்க்
கங்கங்கேயறுசமயமாகிநின்ற
திக்கினையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (5)

புகழொளியைப்புரமெரித்தபுனிதன்றன்னைப்
பொன்பொதிந்தமேனியனைப்புராணன் றன்னை
விழவொலியும்விண்ணொலியுமானான்றன்னை
வெண்காடுமேவியவிகிர்தன்றன்னைக்
கழலொளியுங் கைவளையுமார்ப்பவார்ப்பக்
கடைதொறு மிடுபிச்சைக்கென்று செல்லுந்
திகழொளியைத்திருமுதுகுன்றுடையான் றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (6)

போர்த்தானை யின்னுரிதோல்பொங்கப்பொங்கப்
புலியதளேயுடையாகத் திரிவான்றன்னைக்
காத்தானையைம்புலனும் புறங்கண்மூன்றுங்
காலனையுங்குரைகழலாற்காய்ந்தான் றன்னை
மாத்தாடிப்பத்தராயவணங்குந் தொண்டர்
வல்வினைவேரறும் வண்ணம்மருந்துமாகித்
தீர்த்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (7)

துறவாதேயாக்கைதுறந்தான்றன்னைச்
சோதிமுழுமுதலாய்நின்றான்றன்னைப்
பிறவாதேயெவ்வுயிர்க்குந்தானேயாகிப்
பெண்ணினோடாணுருவாய் நின்றான்றன்னை
மறவாதேதன்றிறமேவாழ்த்துந்தொண்டர்
மனத்தகத்தேயனவரமன்னிநின்ற
திறலானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (8)

பொற்றூணைப்புலானாறுகபாலமேந்திப்
புவலோகமெல்லா முழிதந்தானை
முற்றாதவெண்டிங்கட் கண்ணியானை
முழுமுதலாய்மூவுலகுமுடிவொன்றில்லாக்
கற்றூணைக் காளத்திமலையான்றன்னைக்
கருதாதார் புரமூன்றுமெரியவம்பாற்
செற்றானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியா தேதிகைத்தவாறே. 9)

இகழ்தானைஇருபதுதோணேரிய வூன்றி
யெழுநரம்பினிசைபாட வினிதுகேட்டுப்
புகழ்ந்தானைப்பூந்துருத்திமேயான்றன்னைப்
புண்ணியனைவிண்ணவர்கணிதியந்தன்னை
மகிழ்ந்தானை மலைமகளோர் பாகம்வைத்து
வளர்மதியஞ்சடைவைத்துமாலோர்பாகந்
திகழ்ந்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (10)

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்தி நாயனார்

பண். நட்டராகம்] [7ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொன்செய்தமேனியினீர் புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலுமெரித்தீர் முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள் பரவையிவடவன்முகப்பே
யென்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே. (1)

உம்பரும்வானவருமுடனேநிற்கவேயெனக்குச்
செம்பொனேத்தந்தருளித்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலாள் பரவையிவள்வாடுகின்றா
னெம்பெருமானருளீரடியேனிட்டளங்கெடவே. (2)

பத்தாபத்தர்களுக்கருள்செய்யும் பரம்பனே
முத்தாமுக்கணனே முதுகுன்றமர்ந்தவனே
மைத்தாருதடங்கண் பரவையிவள்வாடாமே
யத்தாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (3)

மங்கையொர்கூறமர்ந்தீர் மறைநான்கும்விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
கொங்கைநல்லாள் பரவைகுணங் கொண்டிருந்தாண்
முகப்பே
யங்கணனேயருளாயடியேனிட்டங்கெடவே. (4)

மையாருமிடற்றாய் மருவாய்புரமூன்றெரித்த
செய்யார் மேனியனேதிகழும்முதுகுன்றமர்ந்தாய்
பையாரும்மர வேரல்குலாளிவள் வாடுகின்றா
ளையாதந்தருளாயடி யேனிட்டளங்கெடவே. (5)

நெடியானான்முகனுமிரவியொடுமிந்திரனு
முடியால்வந்திறைஞ்ச முதுகுன்றமர்ந்தவனே
படியாரும்மியலாள் பரவையிடவன்முகப்பே
யடிகேடந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (6)

கொந்தணவும் பொழில்சூழ்குளிர்மாமதின்மாளிகைமேல்
வந்தணவும்மதிசேர்சடைமாமுதுகுன்றுடையாய்
பந்தணவும் விரலாள் பரவையிடவன்முகப்பே
யந்தணனேயருளாயடியேனிட்டளங்கெடவே. (7)

பரசாருங்கரவாபதினெண்கணமுஞ்சூழ
முரசார்வந்ததிரமுதுகுன்றமர்ந்தவனே
விரைசேருங்குழலாள் பரவையிடவன்முகப்பே
யரசேதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (8)

ஏத்தாதிருந்தறியேனிமையோர் தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லா முதுகுன்றமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள் பரவையிடவன்முகப்பே
கூத்தாதந்தருளாய் கொடியேனிட்டளங்கெடவே. (9)

பிறையாருஞ்சடையெம் பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர் வணங்கும்முதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயனாவலாரூரன் சொன்ன
விறையார்பாடல் வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே. (10)

திருச்சிற்றம்பலம்

பண்-கொல்லிக்கௌவாணம்] [7-ஆம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நஞ்சியிடையின்றுநாளையென்றும்மைநச்சுவார்
துஞ்சியிட்டார்பின்னைச்செய்வதென்னடி கேள்சொலீர்
பஞ்சியிடப்புட்டில்கீறுமோபணியீரருண்
முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர் முதுகுன்றரே. (1

ஏரிக்கனகக்கமலமலரன்னடி சேவடி
யூரித்ததனையுந்திரிந் தக்காலவைநோங்கொலோ
வாரிக்கட்சென்று வளைக்கப்பட்டு வருந்திப்போய்
மூரிக்களிறுமுழக்கறாமுதுகுன்றரே. (2)

தொண்டர்கள் பாடவிண்ணோர்களேத்தவுழிதர்வீர்
பண்டகந்தோறும் பலிக்குச்செல்வது பான்மையே
கண்டகர்வாளிகள் வில்லிகள் புறங்காக்குஞ்சீர்
மொண்டகைவேள்விமுழக்கறாமுதுகுன்றரே. (3)

இளைப்பறியீரிம்மை யேத்துவார்க்கம்மைசெய்வதன்
விளைப்பறியாதவெங்காலனையுயிர்வீட்டினீ
ரளைப்பிரியாவரவல்குலாளொடு கங்கைசேர்
முளைப்பிறைச்சென்னிச்சடைமுடிமுதுகுன்றரே. (4)

ஆடியசைந்தடியாருநீருமகந்தொறும்
பாடிப்படைத்தபொருளெலாமுமையாளுக்கோ
மாடமதிலணிகோபுர மணிமண்டப
மூடிமுகிறவழ்சோலைசூழ்முதுகுன்றரே. (5)

இழைவளர் நுண்ணிடைமங்கையோடிடுகாட்டிடைக்
குழைவளர்காதுகண்மோத நின்றுகுளிப்பதோ
மழைவளருந் நெடுங்கோட்டிடை மதயானைகண்
முழைவளராளிமுழக்கறாமுதுகுன்றரே. (6)

சென்றிலிடைச் செடிநாய் குரைக்கச்செடிச்சிகண்
மன்றிலிடைப்பலிதேரப்போவது வாழ்க்கையே
குன்றிலிடைக்களிறாளிகொள்ளக்குறத்திகண்
முன்றிலிடைப்பிடிகன்றிடும் முதுகுன்றரே. (7)

அந்திதிரிந்தடியாரு நீருமகந்தொறுஞ்
சந்திகடோறும்பலிக்குச்சொல்வதுதக்கதே
மந்திகடுவனுக்குண்பழநாடி மலைப்புற
முந்தியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. (8)

செட்டிநின்காதலியூர்கடோறுமறஞ்செய
வட்டுமின் சில்பலிக்கென்ற கங்கடைநிற்பதே
பட்டிவெள்ளேறு கந்தேறுவீர் பரிசென்கொலோ
முட்டியடி தொழநிமுறசீர் முதுகுன்றரே. (9)

எத்திசையுந்திரிந்தேற்றக் காற்பிறரென்சொலார்
பத்தியினாலிடுவாரிடைப் பலிகொண்மினோ
வெத்திசையுந்திரையேற மோதிக்கரைகண்மேன்
முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரே. (10)

முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரைப்
பித்தனொப்பானடித் தொண்டனூரான்பிதற்றிவை
தத்துவஞானிகளாகினார் தடுமாற்றிலா
ரெத்தவத்தோர்களுமேத்துவார்க்கிடரில்லையே. (11)

திருச்சிற்றம்பலம்

# நம்பியென்ற திருப்பதிகம்

பண்-தக்கேசி] [7ஆம்-திருமுறை

திருச்சிற்றம்பலம்

மெய்யைமுற்றப் பொடிப்பூசியொர்நம்பி
வேதநான்கும்விரித்தோதியொர்நம்பி
கையிலோர்வெண்மழுவேந்தியொர்நம்பி
கண்ணுமூன்றுடையாயொருநம்பி
செய்யநம்பிசிறுச்செஞ்சடைநம்பி
திரிபுரந்தீயெழச்செற்றதோர்வில்லா
லெய்தநம்பியென்னேயாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே (1)

திங்கணம்பிமுடிமேலடியாற்பாற்
சிறந்தநம்பிபிறந்தவுயிர்க்கெல்லா
மங்கணம்பியருண்மால்விசும்பாளு
மமரர்நம்பிகுமரன்முதற்றேவர்
தங்கணம்பிதவத்துக்கொருநம்பி
தாதையென்று சன்ரண்பணிந்தேத்து
மெங்கணம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பி கண்டாயே. (2)

வருந்தவன்றும்மதயானேயுரித்த
வழக்குநம்பிமுழக்குங்கடனஞ்ச
மருந்துநம்பியமரர்க்கமுதீந்த
வருளெனம்பிபொருளால்வருநட்டம்
புரிந்தநம்பிபுரிநூலுடைநம்பி
பொழுதும்விண்ணும்முழுதும்பலவாகி
யிருந்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே (3)

ஊறுநம்பியமுதாவுயிர்க்கெல்லா
முரிய நம்பிதெரியம்மறையங்கங்
கூறுநம்பிமுனிவர்க்கருங்கூற்றைக்
குமைத்தநம்பி குமையாப்புலனைந்துஞ்
சீறுநம்பிதிருவெள்ளடைநம்பி
செங்கண்வெள்ளைச்செழுங்கோட்டெருதென்று
மேறுநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (4)

குற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக்
குலைத்தநம்பிசிலையாவரைகையிற்
பற்றுநம்பிபரமானந்தவெள்ளம்
பணிக்குநம்பியெனப்பாடுதலல்லான்
மற்றுநம்பியுனக்கென் செயலல்லேன்
மதியிலேன்படுவெந்துயரெல்லா
மெற்றுநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (5)

அரித்தநம்பியடிகைதொழுவார்நோ
யாண்டநம்பிமுன்னைபூண்டுலகங்க
டெரித்தநம்பியொருசேவுடைநம்பி
சில்பலிக்கென்றகந்தொறுமெய்வேடந்
தரித்தநம்பிசமயங்களினம்பி
தக்கன்றன்வேள்விபுக்கன்றிமையோரை
யிரித்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (6)

பின்னைநம்பும்யத்தானெடுமாலும்
பிரமனுமென்றிவர்நாடியுங்காணா
வுன்னைநம்பியொருவர்க்கெய்தலாமே
யுலகுநம்பியுரைசெய்யுமதல்லான்
முன்னைநம்பிபின்னும்வார்சடைநம்பி
முழுதிவையித்தனையுந்தொகுத்தாண்ட
தென்னைநம்பியெம்பிரானாயநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (7)

சொல்லை நம்பி பொருளாய் நின்றநம்பி
தோற்றமீறும் முதலாகியநம்பி
வல்லைநம்பியடியார்க்கருள்செய்ய
வருந்தினன்பியுனக்காட்சி செயகில்லா
ரல்லநம்பிபடுகின்றதெனாடி
யணங்கொருபாகம்வைத் தெண்கணப்போற்ற
வில்லநம்பியிடுபிச்சை கொணம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (8)

காண்டுநம்பிகழல்சேவடியென்றுங்
கலந்துனைக்காதலித் தாட்செய்கிற்பாரை
யாண்டுநம்பியவர்முன்கதிசேர
வருளுநம்பிகுருமாப்பிறைபாம்பைத்
தீண்டுநம்பிசென்னியிற் கன்னிதங்கத்
திருத்துநம்பிபொய்ச்சமண்பொருளாகி
யீண்டுநம்பியிமையோர்தொழுநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (9)

கரக்குநம்பிகசி யாதவர்தம்மைக்
கசிந்தவர்க்கிம்மையோடம்மையிலின்பம்
பெருக்குநம்பிபெருகக்கருத்தா. (10)

திருச்சிற்றம்பலம்

# அருணகிரிநாதர்

## திருப்புகழ்

### திருச்சிற்றம்பலம்

குடத்தாமரை யாமென வேயிரு
 தணர்த்தார்மதி வாணுத லாரிருள்
 குழற்காடின மாமுகில் போன்மூது கலைமோதக்
குழககார் மயிலாமென வேகவயல்
 விழித்தார்கர மேல்கொடு மாமுலை
 குடத்தியாழ்கிளி யாமென வேகுயில் குரலோசை

படத்தார்மயி லாமென வேநடை
 நெளித்தார்பல காமுகர் வார்கலை
 பழிப்பாரவ ரசையை மேல்கொடு விலைமாதர்
படிக்கார்மின லாமென வேநகை
 புரித்தார்பலர் வாயிதழ் சேர்பொருள்
 பறிப்பார்பழி காரிகள் நாரிகள் உறவாமோ

வடைத்தார்கட லோர்வலி ராவண
 குலத்தோடரி யோர்சர னார்சின
 மழித்தார்முகி லேய்நிற ராகவர் மருகோனே
அறுத்தராய னார்தலை யேபுர
 மெரித்தாரதி லேபுத னாயிரு
 ரளித்தாருடல் பாதியி லேயுமை யருள்பாலா

விடத்தாரசு ரர்பதி வேரற
வடித்தாய்கதிர் வேல்கொடு சேவகம்
விளைத்தாய்குடி வாழும ரோர்சிறை மிடிதீர
விழித்தாமரை போலழ காகுற
மகட்காவன ணாவென தாயுரை
விருத்தாசலம் வாழ்மயில் வாகன பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# திருமுதுகுன்றத்துப் பெருமை

## புராண வரலாறு

கயிலாயத்(து) இருந்தருளிக் கண்ணுதலோன் உமைக்கருள,
மயிலூர்தி கேட்டருளி, வியாசர்க்கு மகிழ்ந்(து) உரைப்பச்
செயலாரும் 'சுமந்தமுனி' தெய்வன் மார்க்(கு) உரைசெய்யப்
பயிலாலே 'சூதர்' சொல்லூம் பதினெட்டுப் புராணத்துள்,
இரும் 'பிரம கைவர்த்தம்' எனும்பத்தாம் புராணத்தில்
பொருந்துசிவன் விருத்தகிரிப்புராணத்தை தமிழ்செய்வேன்
அரும்பரனும், 'நாதசன்மா அனவத்திக்(கு) உரைத்தபடி
திருந்(து), உமைகேள்' எனச்சொன்னால், சிறுநாயேன்
துணி(வு) என்னாம் ?

## தீர்த்த விசேடம் — கிரி விசேடம்

வேய்உதிரும் முத்தாறு, விரவியணை முத்தாறு
போய்உதகம் படியாரே, புலையர்! அகம்படியாரே!
மாயமல முதுகுன்றர்! வயல்கமல முதுகுன்றர்!
தூயஅரைப் பணியாரே! சூழ்ந்(து)அவரைப் பணியாளரே!

## விருட்ச விசேடம்

திருமுன்னே மெய்வன்னி! 'சிரகிரியார் மெய்'வன்னி!
இருவன்னி தரும்குவளை! இருகாதில், இலங்குவளை,
பெருமலையான் கற்பகமே! 'பெருவன்னி' கற்பகமே!
வருவதுவும் ஆர்ச்சனமே! மருவியற மார்ச்சனமே!

## தல விசேடம்

பழமலையில், இருந் தவரே பலிப்புண்டாம் இருந்தவரே!
அழகுபணி வருந்தினரே, அருள்நிறைய அருந்தினரே!
குழகன் அடி கண்டாரே கூற்றன்அடிக்(கு) அண்டாரே!
எழிலைஉற வளைந்தவரே, இன்பம்உற அளைந்தவரே!

## க்ஷேத்திரக் கீர்த்தி

தோற்றுவித்த நான்முகனார் துஞ்சியநாள், கடல்ஏழும்
வீற்(று)ஒன்றாய்க் கீழ்தாழ மேலுயர்ந்து நின்றபதி!
நாற்றிசை எண் நம்பிக்கு நம்பிக்கைக் கனகம் அளித்(து)
ஆற்றிலிட்டுத் திரு ஆரூர் குளத்(து) அளிக்கும் அரியபதி!





சிவகாமி பவர் பிரிண்டர்ஸ், விருத்தாசலம்.

121